Registered as a Newspaper

Alpha Tuition Centre
A/L 89
விலங்கியல்
திரு. நரேந்திரன்
(முன்னைநாள் பிரபல ஆசிரியர்)
ஆரம்பம் :-
09.09 1987
4-00 p. m.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

Alpha Tuition Centre
Point Pedro Road,
Kalviankadu.
O/L 87
★ விஞ்ஞானம் ★
(மீட்டல் வகுப்பு)
திரு. செல்வவடிவேல்
ஆரம்பம் :-
09-09-1987
5-00 p. m.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ ஆவணி மீ 23 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 13 (08 – 09 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 246

குடாநாட்டின் பல பகுதிகளிலும்

# அமைதிப்படை முகாம்கள் முன்பாக மக்கள் மறியல்

## இந்திய இராணுவம் முடங்கியது

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 8

**குடாநாட்டின் பல பகுதிகளிலும், சகல இந்திய அமைதிப்படை முகாம்கள் முன்பாகவும் நேற்று மக்கள் திரண்டிருந்து மறியற் போராட்டம் நடத்தினர்.**

**அதன் விளைவாக இந்திய இராணுவத்தினர் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் முகாம்களிலேயே இருக்க வேண்டியதாயிற்று.**

சமூக விரோதக் குழுக்களுக்கு இந்திய சமாதானப் படை ஆதரவு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும்—

ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எப். ஆகிய இயக்கங்களிடமுள்ள ஆயுதங்களை இந்திய சமாதானப் படை பறிமுதல் செய்ய வேண்டும் என வற்புறுத்தியும்—

சகல தமிழ் அரசியல் கைதிகளையும் விடுக்குமாறு வற்புறுத்தியும்—

கிழக்கில் நடக்கும் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும், சிங்களக் குடியேற்றங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும்—

இன்னும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் மறியற் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை முதல் மாலை வரை மறியல் போராட்டம் இடம் பெற்றது.

மறியல் நடைபெற்ற இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின்பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன

இந்த பொதுக்கூட்டங்களில் புலிகளின் பிரமுகர்கள் யோகி, காசி ஆனந்தன், திலகர், முரளி ஆகியோர் உரையாற்றினர்.

யாழ்ப்பாணம் கோட்டை, பலாலி, காங்

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



அமைதிப் படையை இஞ்சை அனுப்பிக் காசு செலவழிக்கிறதோடை, கோடிக்கணக்காகவும் நிதி உதவி என்டா உதுக்குள்ளை ஏதோ விஷயமிருக்குது போலை.. .!

துரோகிகள் நடவடிக்கை நீடித்தால்

## இந்திய அமைதிப்படை வெளியேற முடியாமல் மறியல்போர் தொடரும்

குருநகர், செப். 8

இங்கே இன்று நடைபெற்ற மறியல் போராட்டம் அடையாளமாக நடத்தப்பட்ட ஒன்றாகும். மேலும் இந்திய இராணுவத்தின் உதவியுடன் துரோகக் கும்பல்களின் செயற்பாடுகள் குடாநாட்டில் தொடருமானால் இந்திய அமைதிப்படை இராணுவம் வெளியேற முடியாமல் தொடர்ந்து மறியல் போராட்டம் நடத்தப்படும்.

நேற்று மாலை யாழ்—கோட்டை, பிரதான வீதி வாயிலில் நடைபெற்ற மறியல் போராட்டத்தை முடித்து வைத்து உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன் மேற்கண்டவாறு கூறினார்.

திலீபன் மேலும் பேசுகையில் "ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணித் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்களைப் பிழையான வழி

(6 ம் பக்கம் பார்க்க)

### நேற்றைய கோஷங்கள்

யாழ்ப்பாணம், செப். 8

நேற்று யாழ் குடாநாட்டில் இந்திய சமாதானப் படையினரின் முகாம்களுக்கு முன்னால் மறியல் செய்தவர்களால் பின்வரும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

★ சிறையில் வாடும் சகல தமிழ் மக்களையும் உடனடியாக விடுதலை செய்.

★ கிழக்கில் நடக்கும் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வை.

★ எமது தாயகத்தில் நடைபெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து

★ எமது தாயகத்தில் குடியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும்.

★ எமது தாயகத்தில் இருந்து சிறிலங்கா இராணுவத்தை வெளியேற்று:

[6ம் பக்கம் பார்க்க]

### முன்னாள் பிஷப் கருத்து

கொழும்பு, செப் 8

இன்று எம்மத்தியில் 'கடவுள் தரிசனம்' தோன்றியுள்ளது என்பதில் சந்தேகமே இல்லை. இதற்காக இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும்.

கொழும்பு முன்னாள் பிஷப்வணபிதா சுவிதின் பெர்னாண்டோ முன் சண்டவாறு தெரிவித்தார்.

ஜாஎலவில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் முன்னாள் பிஷப் இதனைத்தெரிவித்தார்.

[இ-எ]

வடக்கு, கிழக்கிற்கு

# 45 கோடி ரூபா இந்தியா வழங்கும்

புதுடில்லி, செப். 8

இலங்கையின் வடக்கு மாகாணங்களில் புனர் நிர்மாண, புனர் வாழ்வு வேலைகளுக்கு 45 கோடி ரூபாவை (இந்திய ரூபா) இந்தியா வழங்கும்.

இப்படி இந்திய நிதி அமைச்சர் நாராயணதத் திவாரி நேற்று ஆரம்பமான இந்திய-இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

45 கோடி ரூபாவில் 25 கோடி ரூபா மானியமாக வழங்கப்படும். எஞ்சிய 20 கோடி ரூபா சுலபமான தவணைகளில் திருப்பி வழங்கக் கூடிய கடனாக வழங்கப் படும்.

இந்திய-இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக் கூட்டம் நேற்றுப் புதுடில்லியில் ஆரம்பமானது.

ஐந்து ஆண்டுகால இடைவெளியின் பின்னர் ஆணைக்குழுவின் கூட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது

இந்திய அரசுக் குழுவுக்கு நிதி அமைச்சர் நாராயண் தத் திவாரி தலைமை வகிக்கின்றார்.

இலங்கை அரசுக் குழுவுக்கு நிதி அமைச்சர் ரொனி டி மெல் தலைமை வகிக்கின்றார்.

அமைச்சர் திவாரி கூட்டத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் சொன்னதாவது:

இக்கூட்டுக் குழுக் கூட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ராஜீவ் நேற்று மதுரை செல்லவில்லை

விசாகப்பட்டினம், செப்8

திட்டமிட்டபடி பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று இரவு மதுரை செல்லவில்லை.

காலநிலை சீரற்று இருந்த காரணத்தினால் பிரதமர் காந்தி விசாகப் பட்டினத்தில் நேற்று இரவு தங்கினார்.

இன்று (செவ்வாய்) காலை பிரதமர் மதுரைக்குச் செல்வார். (இ-எ)

### கண்டன சுவரொட்டிகள்

சம்பாறை, செப். 8

மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஜனாப் ஹபீப் முகம்மட் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் காலமானதையிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள பல முஸ்லிம் கிராமங்களிலும் கண்டன சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன (ஒ-14)

### விவரம் சேகரிப்பு

வடமராட்சி, செப். 8

வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன் கெடுபிடிகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பற்றிய விவரங்களை வடமராட்சி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களும் சேகரித்து வருகின்றார்கள்.

[இ-16]

## கடத்தப்பட்டோரை விடுவிக்கக் கோரி கிளிநொச்சியில் ஊர்வலம்

கிளிநொச்சி, செப். 8

பரந்தன் குமரபுரத்தில் வைத்துக் கடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கதிரன், பவி, ராஜன் ஆகியோரை விடுதலை செய்யக் கோரி ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் நடைபெற்றது.

கிளிநொச்சியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், மற்றும் பொது மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

கரடிப் போக்கிலிருந்து ஊர்வலமாகப்புறப்பட்ட இவர்கள் பரந்தன் சந்தியை வந்தடைந்து பரந்தனில் முகாமிட்டிருக்கும் இந்திய இராணுவ முகாமிற்குச் சென்று அம் முகாம் பொறுப்பதிகாரி மேஜர் பாலகிருஸ்ணனிடம் தமது முறைப்பாட்டைத் தெரிவித்தனர்.

அவர்கள் தமதுமுறைப்பாட்டில் கடந்த சனிக்கிழமை பரந்தன், குமரபுரத்தில் வைத்துக் கடத்தப்பட்ட மூன்று இளைஞர்களையும் ஈ. என். டி எல். எப். என்றஇயக்கத்திடமிருந்து உடனடியாக மீட்டுத்தருமாறும்—

கடந்தஇந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின் சுமார் 13க்கு மேற்பட்ட இளைஞர்கள் இயக்கங்களினால் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் இதனைத் தடுத்து நிறுத்துமாறும்—

இக் கொலைச் சம்பவங்களுக்கு இந்தியப் படை துணைபோவதை ஆட்சேபிப்பதாகவும் தெரிவித்தனர்- (இ-76)

இந்திய சமாதானப்படை ஊக்குவிக்கின்றது

## சட்ட விரோத நடவடிக்கைகளை சட்டபூர்வமாக்கும் முயற்சி

### புலிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப் 8

குற்றச்செயல்களிலும், சமூக விரோதச் செயல்களிலும் சில குழுக்கள் ஈடுபட்டிருக்கின்றன. இத்தகைய குழுக்களின் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுப்பதன் மூலம் சட்டவிரோத செயல்களை சட்டபூர்வமாக்கும் முயற்சியில் இந்திய சமாதானப் படை ஈடுபட்டிருக்கிறது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இப்படிக் குற்றம் சுமத்தியிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கிராத் சிங்குக்கு நேற்று மகஜர் ஒன்றைக் கையளித்தனர். அந்த மகஜரிலேயே மேற்படி குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது,

மகஜர் வருமாறு:

எமது மக்களின் உண்மையான அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாகிய நாம் பின்வரும் விஷயங்களைத் தங்கள் அவசர, தீவிரக் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

குற்றச் செயல்களிலும் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் தடுத்து நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், செப் 8

நேற்றுக் காலை கொழும்பு புறப்பட இருந்த யாழ்தேவி ரயிலை மக்கள் கூட்டம் ஒன்று தடுத்து நிறுத்தியது.

இந்திய அமைதிப் படை முகாம்களின் முன் நடைபெற்ற மறியல்

[6ம் பக்கம் பார்க்க]

மறியல் போரால்

## யாழ் குடாநாடு ஸ்தம்பிதம் அடைந்தது

யாழ்ப்பாணம், செப்.8

நேற்று நடைபெற்ற மறியல் போராட்டம் காரணமாக யாழ் குடாநாடு ஸ்தம்பிதம் அடைந்தது

வர்த்தக ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்துக்களும் நேற்று நடைபெறவில்லை.

ஒலிபெருக்கி பொருத்திய வாகனங்கள் ஆங்காங்கே சோக இசையை ஒலிபரப்பின. (இ–7)

**சுபநேரம்**

08-09-1987
செவ்வாய்க் கிழமை
ஆவணி 23
சுபநேரம்:-
10.34முதல் 12.04வரை
ராகுகாலம்:-
3.04 முதல் 4.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
மஹாளய பக்ஷாரம்பம்

# சிங்களக் குடியேற்றம்: டில்லி சென்று பேசுமாறு இந். ராணுவம் கூறுகிறது

— திருமலையில் இருந்து கே. இரத்தினராஜசிங்கம் —

திருகோணமலை, செப் 8

திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறும் சிங்களக்குடியேற்றங்களைத் தடுத்துநிறுத்துவதற்கு இந்திய இராணுவத்தினருக்கு அதிகாரம் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அவற்றைத் தடுத்து நிறுத்துவது சம்பந்தமாக புதுடில்லி அதிகாரிகளுடன் பேச்சு நடத்துமாறு இந்திய இராணுவஅதிகாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கூறியுள்ளனர்.

திருமலைமாவட்டத்தில் நடைபெறும் சிங்களக் குடியேற்றம்தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டத் தளபதி திரு. கு. புலேந்திரன் (அம்மான்) திருமலை மாவட்டத்தின் இந்திய பிரிகேடியர் திரு. குல்வத்சிங்கிடம் முறையிட்டபோதே இவ்வாறு அறிவிக்கப்பட்டதாம்.

இதனைத் திரு புலேந்திரன் திருமலையில் வைத்து நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் திருமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சுமார் பத்தாயிரம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் வாழ்ந்த கிராமங்கள் பலவற்றுக்கும் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டு புதிய குடியேற்றங்களும் நடைபெறுகின்றன.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் தான் திருமலையில் சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்தன.

இந்திய இராணுவம் பாதுகாப்பை கையேற்றதன் பின்பு திருமலையில் தமிழ்-சிங்கள-முஸ்லிம் குழப்பங்கள் ஏற்பட்டன

எனவே இந்திய இராணுவத்தால் எமக்கு எதுவித நன்மையும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திருமலையில் சிங்களக் குடியேற்றம் தொடர்பாக இந்திய இராணுவ

(6 ஆம் பக்கம் பார்க்]

யாழ்நகரில்

## வர்த்தகர் கொலை பொருள் கொள்ளை

யாழ்ப்பாணம், செப். 8

யாழ் நகரில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் கொலைசெய்யப்பட்டு பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பாலேல் ப்ள் ரீஸ்பா உரிமையாளர்முத்தையா பிள்ளை கனகலிங்கம் (பாலா வயது 36) என்பவரே கொலைசெய்யப்பட்டவர் ஆவார்.

சம்பவம் பற்றித்

(6ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையில் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★ ★★★★
★மின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★ ★★★★

### சேவை

இலங்கை மின்சார சபை லங்கா சிமெந்து லிமிட்டெட், வெளிநாடுகள் ஆகியவற்றில் மின் அத்தியட்சகராகவும், பொறியியலாளராகவும் 25 வருடங்களுக்கு மேல் சேவை செய்து அனுபவமுள்ளவரின் மேற்பார்வையில் சகல வயறிங் வேலைகளும், வயின்டிங் வேலைகளும் செய்யப்படும். ஆலோசனைகள் இலவசம். OMEGA, Manpay Road, Jaffna (904)

### விற்பனைக்கு

(1) 16 பரப்புக்காணி புன்னாலைக்கட்டுவன்- (2) 12 பரப்புக்காணி பலாலி வீதி [3] 4 பரப்புக்காணி- ஊரெழு [4] 18 பரப்புக்காணி- பலாலி வீதி

உரிமையாளர் விரைவில் லண்டனில் இருந்து விடுமுறையில் வந்து விற்பனையை முடித்துக்கொண்டு திரும்புவார். தாமதமின்றித்தொடர்பு கொள்ளவும் தரகரும் தொடர்பு கொள்ளலாம் விளம்பர எண் - 69 பே/பா உதயன், யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

திருப்புரத்துக்கும் வில்வமடுவுக்கும் இடையில் செ. கணேசமூர்த்தி, விவசாய இலாகா, முல்லைத்திவு என்று விலாசமிடப்பட்ட அலுவலகப் பை (Office Bag) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விவசாய இலாகா, முல்லைத்திவு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### மணப்பந்தல்

யாழ் இந்துமத B.Sc. எஞ்சினியர் யாழ்ப்பாணத்தில் தொழில்புரியும் (31 வயது) அவரின் சகோதரி(வயது29) A/L படித்தவருக்கும் மாற்று விவாகம் செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ளவும். ABCDE விவாகப் பொருத்துனர், 1,குமாரசாமி ரோட், கந்தர்மடம். (1666)

### ஹோட்டல் இயங்குகிறது

நிலாவெளி 'புளுலகூன்' ஹோட்டல் மீண்டும்இயங்குகின்றது. இராணுவத்தினர் ஏற்கனவே வெளியேறியதை யடுத்து திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.


மோசமாகப் பாதிக்கப்பட்ட

# வல்வை ஆதி கோவிலடி மக்கள் அவலநிலை நீடிப்பு

## இன்னும் உதவி எதுவும் இல்லை

வடமராட்சி, செப் 8

வடமராட்சியில் நடைபெற்ற ஒப்பரேஷன் லிபரேஷனின் போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வல்வை ஆதி கோவிலடி கிராமத்தைச் சேர்ந்த 470 குடும்பங்கள் மிகவும் மோசமான நிலையில் இன்னும்கஷ்டப் படுகின்றன.

இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உறவினர்களின் வீடுகளிலும், வல்வை சிவகுரு வித்தியாலயத்திலும் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கும் இவர்கள், தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத நிலையில் உள்ளனர்.

இவர்களின் புனர்வாழ்வுக்கென எந்த வித உதவியும்தொண்டர் ஸ்தாபனங்கள், கழகங்களால் இதுவரை வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு இனிமேலாவது தொண்டர் ஸ்தாபனங்கள் உதவ முன் வருமா என அப்பகுதி மக்கள் கேட்கிறார்கள்.

[இ-ஓ-160]

### துப்பாக்கிகள் கொள்ளை

கொழும்பு, செப் 8

பொலீஸ் சீருடையில் வந்த ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று ஐந்து வீடுகளுக்குள் புகுந்து துப்பாக்கிகளைக் கொள்ளையடித்துச்சென்றது.

இச்சம்பவம் கடந்த வியாழன் அதிகாலை நீர்கொழும்புப் பொலீஸ் பிரிவில் டகோன்ன என்னும் இடத்தில் நடைபெற்றது.

ஒரு வீட்டில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் கொள்ளையடிக்கப்பட்டன.

நீர்கொழும்புப் பொலீசார் விசாரித்து வருகின்றனர். (இ-எ)

### கத்தியுடன் திரியும் கரிய உருவம்

குருநகர், செப். 8

கொக்குவில், வண்ணார்பண்ணை மேற்கு நாச்சிமார் கோவிலடிப்பகுதிகளில் நள்ளிரவு வேளைகளில் கரிய உருவம் ஒன்று கையில் கிறிஸ் கத்தியுடன்உலவி வருவதாகச் சொலலப்படுகிறது.

வண்ணை மேற்கு லோட்டஸ்வீதி வீடொன்றில் கசற் றெக்கொடர் ஒன்றும் திருட்டுப் போயுள்ளது.

ஆண்களின் துணையில்லாத வீடுகளில் இவ்வுருவம் சென்று சேஷ்டைகளில் ஈடுபடுவதாகவும், பெண்கள் கூக்குரல் போட்டதும் கரிய உருவம் ஓடி மறைந்து விடுவதாகவும் தெரிய வருகிறது. [இ-51]

### குளிக்கப்போன முஸ்லிம் பெண்கள் தெரிவித்த முறைப்பாடு!

அம்பாறை, செப் 8

ஆற்றுக்குக் குளிக்கச் சென்ற முஸ்லிம் பெண்களில் சேஷ்டை விட முயன்றனராம் பொலீஸார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சென்றல் காம்ப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் தொடர்பாக பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும் சம்மாந்துறை எம்.பியுமான ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீதிடம் முறையிடு செய்யப்பட்டு அவருக்கூடாக பொலீஸ் மேலிடங்களுக்கும் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது;

சம்பவதினம் சென்ரல் காம்ப் பலார் பகுதியைச் சேர்ந்த 20 முஸ்லிம் பெண்கள் 10ஆம் கொலனி எனுமிடத்திலுள்ள ஆற்றில் பெண்கள் பகுதியில் குளித்துக் கொண்டிருந்தனர்.

அவ்வேளை ஒர் பொறுப்பதிகாரி தலைமையில் அவ்விடத்துக்கு வந்த பொலீஸ் கோஷ்டியினர் பெண்கள் குளித்துக் கொண்டிருந்த பக்கம் வந்தனராம்.

எமது செருப்புக்களைக் காணவில்லை உங்கள் கால்களைப் பார்க்க வேண்டும் என வற்புறுத்தினராம்.

கிலிகொண்டு பெண்கள் கூச்சலிட்ட போது அயலவர்கள் வரவே பொலீஸார் அங்கிருந்து நழுவிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இது பற்றி எழுத்து மூலமான முறைப்பாடுகள் மேலதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. [இ-14]

# ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து ஏமாற்று வேலையில் ஈடுபடுகிறது

புலிகள் பிரமுகர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, செப் 8

இலங்கை-இந்திய ஒப்பந்த விடயத்தில் நாம் கரிசனையாகவே நடந்து கொண்டோம். ஆனால், ஸ்ரீலங்கா அரசு கரிசனையாக நடந்துகொள்ளாமல் தொடர்ந்து தமது ஏமாற்று நடவடிக்கைகளில்தான் ஈடுபட்டு வருகிறது.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை பிராந்திய அரசியல் பிரிவு அமைப்பாளர் இ. பிரான்சிஸ் கொழும்புச் செய்தியாளர்களுடன் நடத்தியசந்திப்பின் போது தெரிவித்தார்.

மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது மாவட்டச் செய்தியாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது;-

எமது தலைவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆயுதங்களை எமக்கு அனுப்பிவைத்தார். போராட்டம் நடத்தினோம். ஆயுதங்களை ஒப்படைக்கச் சொன்னார் ஒப்படைத்து விட்டோம். இதனைத் தவிர ஆயுதம் எந்த நாட்டிலிருந்து வந்தது போன்ற விடயங்கள் எமக்குத் தெரியாது.

ஒப்பந்தத்தை பொறுத்தவரை இந்தியாவின் கோரிக்கையின்பிரகாரம் ஏற்றுக் கொண்டோம். இதற்காக நாம் எமது இலட்சியத்தை, போராட்டத்தைக் கைவிடவில்லை. மாறுபட்ட வடிவத்தில் தமிழீழம் கிடைக்கும்வரை போராடுவோம்.

ஒப்பந்தம் அமுலானவுடன் நாம் கரிசனையாக செயற்பட்டோம். ஓரிரு நாட்கள் ஆயுத ஒப்படைப்பு தாமதமானாலும் கரிசனையாக நடந்து கொண்டோம். ஆனால், ஸ்ரீலங்கா அரசு கரிசனையுடன் நடந்துகொள்ளத் தவறிவிட்டது.

நிராயுதபாணியான போராளிகள் தாக்கப்படுதல், தமிழ்-முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல், தடுப்புமுகாம் விடுதலை தாமதமடைதல் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் போன்றன இதில் அடங்கும்.

சிங்களக் குடியேற்ற விடயத்தில் நாம்என்றும் எதிர்ப்புக் காட்டுவோம். ஆனால் நிரந்தரமாக வாழும் சிங்கள மக்களுடன் எமக்குப் பகை இல்லை. அவர்கள் ஆதரவையும் பெறுவோம். ஆனால் திட்டமிட்ட குடியேற்றங்களைவன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார். ]ஓ-21)

### திருகோணமலையில் உல்லாசப் பயணிகள்

திருகோணமலை, செப்.8

திருகோணமலைக்கு உல்லாசப் பிரயாணிகள் வருகை அதிகரித்துள்ளது. நகரில் பல இடங்களில் உல்லாசப்பயணிகள் தாராளமாக உலாவுவதை தற்போது காணக் கூடியதாக உள்ளது.

இதேவேளை இறக்கக் கண்டியிலுள்ள 'புளூலகூன்' ஹோட்டலில் இயங்கிவந்த ஸ்ரீலங்கா முகாம் அகற்றப்பட்டதனால் மீண்டும் ஹோட்டலை இயங்க வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நகரிலுள்ள 'செவன் ஐலன்ட்' ஹோட்டலில் பல உல்லாசப்பயணிகள் தங்கியுள்ளனர். [உ150]

### தையல் பயிற்சி வகுப்பு

காரைநகர், செப். 8

காரைநகர் வலந்தலை தேசிய இளைஞர் மன்றம் எதிர்வரும் 24 ஆம் திகதி பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்பை ஆரம்பிக்க இருக்கிறது.

பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோரை காரைநகர் தேசிய இளைஞர் மன்றத்துடன் தொடர்பு கொள்ளும்படி இளைஞர் மன்றம் கேட்டுக்கொள்கின்றது. [ஓ-73]

# திறந்த வெளி சிறைச்சாலையாக பெலவத்த முகாம்

கொழும்பு, செப். 8

தமிழ் அரசியல் கைதிகளைத் தடுத்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட பெலவத்த முகாம் திறந்தவெளிச் சிறையாக மாற்றப்படலாம் என்று தெரிய வருகின்றது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் பெலவத்தமுகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு விட்டனர்.

இப்போது முகாம் கட்டடங்கள் காலியாக உள்ளன. இந்த முகாம் முன்னர் மனநோய் ஆஸ்பத்திரியாகப் பயன்படுத்தப் பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தான் சிறைச்சாலைத் திணைக்களம் இக்கட்டடங்களைத் தடுப்பு முகாமாகப் பாவிக்கத் தொடங்கியது.

[இ-எ]

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்8.

''சாகுந்தலகாவியம்'' நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் திரு. சி. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மயிலங்கூடலூர் திரு. பி. நடராஜன் வரவேற்புரையும் திரு. சு. இராசநாயகன் வெளியீட்டுரையும் நிகழ்த்துவர். [ஓ-161]

### புதிய தலைவர்

கிளிநொச்சி, செப். 8

கிளிநொச்சி- பரந்தன் றேட்டறிக்கழகத்தின் புதிய தலைவர் பதவி ஏற்பு வைபவம் நாளை புதன்கிழமை மாலை பரந்தன் றேட்டறி இல்லத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலய அதிபர் திரு. எல். தர்மரத்தினம் புதிய தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளுகிறார். [இ-76

# டீசல் விலை இறங்கியும் லொறிக் கூலி இறங்கவில்லை

## வடபகுதி விவசாயிகள் பாதிப்பு

பலாலி, செப். 8

வடபகுதியில் இருந்து கொழும்புக்கு வெங்காயம், மிளகாய், பீற்றூட் போன்ற விளை பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறி உரிமையாளர்களினால்முன்பு உயர்த்தப்பட்ட கூலி இன்னும் இறங்கவில்லை என்று கூறபடுகிறது.

தலையார் லொறி உரிமையாளர்கள் டீசல் விலை உயர்வையும், அடிக்கடி பொருள்களை இராணுவத் தடைமுகாம்களில் சோதனைக்காக ஏற்றி இறக்குவதையும் காரணம் காட்டி முன்பு உயர்ந்த கட்டணத்தை அறவிட்டனர்.

டீசலின் விலை தற்போது மிகக் குறைந்துள்ளது. சோதனைக்காக ஏற்றி இறக்கும் தொல்லையும் வெகுவாகக் குறைந்து விட்டது. இந்த சூழ்நிலையிலும் லொறி உரிமையாளர்கள் விவசாயிகளிடம் கூடிய பழைய கட்டணத்தையே அறவிடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெங்காயத்தின் விலை கொழும்பில் குறைந்துள்ள சூழ்நிலையிலும், தொடர்ச்சியாக மழை இன்மையால் வெங்காயத்தின் விளைச்சல் குறிப்பிடத்தக்களவு பாதிப்படைந்துள்ளதினாலும் ஏற்கனவே நஷ்டம் அடைந்திருந்த தமக்கு லொறிக் கூலி மேலும் பழுவை ஏற்படுத்துவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (இ-119)

### 83 லட்சம் நஷ்டம்

சாங்கசன்துறை, செப்8

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் மாவட்ட அபிவிருத்திச் சபை காங்கேசன்துறை உப அலுவலகத்திற்கு 83 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

உப அலுவலக கட்டடங்கள், பூங்கா தளபாடங்கள் மின்உபகரணங்கள், வீதிகள், நூல்நிலையப்புத்தகங்கள் என பல்வேறு வகையான இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்விநியோக நிலை சீர் செட்டதால் தனை உடனடியாக சீர் செய்ய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. த. மகா... கம் நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-68)

### நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர்

உதவி ஆணையாளருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 8

மிகவும் மோசமான நிலையில் இருந்த நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தைப் புனரமைத்து யாழ் மாவட்டத்தில் நல்ல ஒரு நிலைக்கு இச் சங்கத்தை உயர்த்தியவர் உதவி ஆணையாளர் வேலாயுதபிள்ளை அவர்களே.

இவ்வாறு கொழும்புக்குப் பதவி உயர்வுடன் மாற்றலாகிச் செல்லும் யாழ் உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. சு. வேலாயுதபிள்ளைக்கு அளித்த விருந்துபசாரத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய நெடுந்தீவு ப. நோ. கூ சங்கத் தலைவர் திரு நா. இராமச்சந்திரன் குறிப்பிட்டார். ... சங்கத்தின் உபதலைவி திருமதி சி. ... உரையாற்றுகையில்:-

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம் தன்னுடைய எல்லைப்பரப்பில் சிறப்பான பணியாற்ற உதவி யதன் மூலம் சங்கத்தினதும் பொதுமக்களினதும் மதிப்பையும் பாராட்டையும் பெறுகிறார் எமது உதவி ஆணையாளர் — என்றார்.

இவ்வைபவத்தில் கொத்தணி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி, நெடுந்தீவு பிரசைகள் குழுச் செயலாளர் திரு. அ. வெ. அரியநாயகம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்.

திரு. வேலாயுதபிள்ளை நன்றியுரை ஆற்றினார். (ஓ)


### அச்சுக் கோர்ப்பவர்கள் உடனே தேவை

உதயன் - சஞ்சீவி அச்சகப் பகுதிக்கு அனுபவமும், ஆற்றலும் சுறுசுறுப்பும் உள்ள அச்சுக் கோர்ப்பவர்கள் உடன் தேவை விண்ணப்பத்துடன் நாளை காலை முதல பிற்பகல் 3 மணி வரை நேரில வரவும்.

முகாமையாளர்,
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
392/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கலர் பிலிம் PROCESSING & PRINTING செய்ய சிறந்த ஸ்தாபனம்
மாதாந்தம் 5 அதிஷ்டசாலிகட்கு கலர் பிலிம் சுருள் இனாம்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்


### நினைவஞ்சலி



பொன்னுத்துரை பாரதிமோகன்

தோற்றம் 04-03-1969 மறைவு 16-03-1987

திதி:- 08-09-1987

அன்பின் திருவுருவே! அருமைத் திருமகனே!!
எம் வீட்டுப் பேரொளியை ஏற்றவந்த திருவிளக்கே!!!
எமை விட்டு ஏன் பிரிந்தாய், ஏன் பிரிந்தாய்?
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பெற்றோர், சகோதர சகோதரிகள், அத்தான்மார், மச்சாள்மார், மாமன்மார், மாமிமார், அண்ணிமார், உற்றார், உறவினர்கள்

(வெள்ளவாய்க்கால், அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இணைப்புத் திட்டம் வெற்றிபெற போராளிகள் ஒன்றுபட வேண்டும்

மட்டக்களப்புப் பிரசைகள் குழுவின் உபதலைவர் வண பிதா சந்திரா பெர்னாண்டோ.

அவர் சொல்கின்றார்:

உயிரிழந்த பட்டினமாக இது இருந்தது. இப்போதுதான் மக்கள் மீண்டும் நடமாடத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இதற்காக இந்திய சமாதானப் படைக்கு நன்றி கூறவேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தியப்படையெடுப்புப் பற்றி நாம் கனவுகண்டுகொண்டிருந்தோம்.

படையெடுப்பு நடக்கக் கூடிய திகதிகளும் தெரிவிக்கப்பட்டன.

இலங்கை அரசின் அழைப்பின்பேரில் இந்தியத் துருப்புக்கள் வந்துள்ளன. படையெடுப்பு இடம்பெருதது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்ரேம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்க்கை வழமைக்குத் திரும்பவேண்டும்; இடம் பெயர்ந்த அகதிகள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.

இதனை உறுதி செய்ய ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்கு இந்தியப்படைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்க வேண்டும்.

- வண. பிதா சந்திரா பெர்னாண்டோவின் இக் கூற்று, யாழ்ப்பாணத்தில் இருந்து 400 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கிழக்குப் பட்டினத்தின் உண்மை நிலையைத் தொகுத்துத் தருவதாக உள்ளது.

ஆகஸ்ட் 9 வரை பட்டினத்தில் உயிரோட்டமே இல்லை. மக்கள் வீடுகளுக்குள் அடைந்து கொண்டிருந்தனர். இந்திய-இலங்கை ஒப்பந்தம் நிலைமையைத் திருத்தக் கூடும் என்று நம்பினர்.

இந்திய அமைதிப்படையினர் வந்திறங்கிய பின்னர்தான் மக்கள் வெளியே வரத்தொடங்கினர்.

ஊர்மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறு கடைகள் தோன்றத் தொடங்கின

துணிச்சலுள்ள சிலர் பட்டினத்துக்கே சென்று பொருள்கள் வாங்கத் தொடங்கினர்.

இலங்கை இராணுவத்துக்கும் மிகப் பயங்கரமான அதிரடிப் படைக்கும் பயந்தே மக்கள் வாழ்ந்து வந்தனர்.

> இந்திய சஞ்சிகை புரொன்ட்லைன் (ஆக 22-செப் 4 இதழில் "மட்டக்களப்பு, மீண்டும் உயிர் பெறுகின்றது" — என்ற தலைப்பில் வெளியான கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.
> எழுதியவர்: 'புரொன்ட்லைன்' செய்தியாளர் வி ஜெயந்த்

இதனாலேயே மக்கள் இந்தியத் துருப்புக்களை வரவேற்றனர். இது இலங்கை இராணுவத்துக்குப் பொறுமையைக் கொடுத்தது.

வரவேற்றதற்காகத் தாம் துன்புறுத்தப்பட்டதாகப் பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர்.

இப்போதும் அச்சம் தென்படுகின்றது ஆனால் நம்பிக்கை அதை மிஞ்சி வளர்ந்துள்ளது. 'சமாதானத்துக்காகப் போராட' மக்கள் திடசித்தம் கொண்டிருக்கின்றனர்.

பிதா. பெர்னாண்டோ சொல்கின்றார்:

நான்கு ஆண்டுகளாக போதுமான அளவு கஷ்டம் அனுபவித்து விட்டோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் வெற்றியாக வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றார்கள்.

இம்முறை ஒப்பந்தம் செயல்படுத்தப்படும் என்று நான் எண்ணுகின்றேன்.

மக்களின் உதவியும் ஆதரவும் இருந்தால் தான் போராளிக் குழுக்கள் செயல்படக் கூடியதாக இருக்கும்.

இன்னொரு ஆயுதப் போராட்டத்துக்கு முகம் கொடுக்கமுடியாது; சமாதானந்தான் வேண்டும் என்று இதே மக்கள் தீர்மானிப்பின், இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்த முடியாது.

கிழக்கு மாகாண மக்கள் திடசித்தமும் சமயப் பற்றும் கொண்டவர்கள் என்பதை என்னால் உங்களுக்குச் சொல்ல முடியும்

-இப்படி பிதா. சந்திரா பெர்னாண்டோ சொல்கின்றார்,

1983 வன்செயல் ஆரம்பமானதைத்தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றிருந்தனர். முழுக்கிராமங்களே கைவிடப்பட்டன. சிலர் காடுகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

வசதி படைத்தவர்கள் ஐரோப்பா சென்றனர். நடுத்தர, ஏழைக் குடும்பங்கள் இந்தியா சென்றனர்.

ஆகவறியவர்கள்தான் சொந்த இடங்களில் இருந்து பாதுகாப்புத் தேடினர். அவர்கள் போராளிகளுக்குஆதரவு வழங்கிப் பாதுகாப்பைப் பெற்றனர்.

மட்டக்களப்பில் தமிழர் 70 சதவிதம். முஸ்லிம்கள் 29 சத வீதம். சிங்களவர்களும் ஏனையோரும் ஒரு சத வீதமே.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையினர். 40 சத வீதம் தமிழர். முஸ்லிம்கள் 33 சத வீதம். அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களினால் சிங்களவர் எண்ணிக்கை 26 சத வீதமாகி விட்டது.

"அம்பாறை குடியேற்றத் திட்டங்களினால் சிங்களமயமாகி விட்டது. மட்டக்களப்பில் வெற்றி காண முடியாமற் போய் விட்டது" — இப்படிச் சொல்கிறார், வண பிதா சந்திரா பெர்னாண்டோ.

மட்டக்களப்பில் உள்ள முஸ்லிம்கள் வர்த்தக நலன்களை அடிப்படையாகக் கொண்டவர்கள்.

கடந்த காலங்களில் நாட்டை ஆளும் கட்சிக்கே அவர்கள் ஆதரவளித்து வந்திருக்கின்றனர்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்குவதற்கு நாம் எதிர்ப்பல்ல"- இப்படி மக்கள் இப்போதும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இதற்கு முதலில் சில ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

1985 இல் நடந்த தமிழ்-முஸ்லிம் கலவரம் ஒரு வடுவை ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமே இல்லை.

இலங்கை ஆயுதப் படையினராலும் தாய்ப் போராளிக் குழுக்களில் இருந்து பிரிந்து சென்றவர்களாலும் தூண்டப்பட்டே தாம் இவ்வாறு செயற்பட்டதாக முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

இணைப்புக்கு முஸ்லிம்களின் ஆதரவு பெறப்படவேண்டுமானால் போராளிக் குழுக்கள் தங்களுக்குள் நிலவும் வேற்றுமைகளைக்களைந்து, பழையதை மறந்து ஒன்றுபட வேண்டும். இப்படி மக்கள் பலர் நினைக்கின்றனர்.

"இணைப்புத்தான் எமக்கு வாய்ப்பானது. இத்திட்டத்தை அடைவதற்கு போராளிக் குழுக்கள் ஒன்று பட்டு உழைக்க வேண்டும்"- பிரசைகள் குழுவின் முக்கிய உறுப்பினர்களின் அபிப்பிராயம் இது.

முஸ்லிம்கள் இது விஷயத்தில் திறந்த மனதுடன் இருக்கின்றார்கள்.

தமிழர்களுடன் சேர்ந்து போகவும் அவர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

மட்டக்களப்பில் உள்ள நிலச் சொந்தக்காரரும் வர்த்தகருமான இப்ராஹிம் சொல்கின்றார்

எமக்கு அவர்களின் உதவி தேவை. அவர்களுக்கு எமது உதவி தேவை.

எம்மிடம் நிலம் இருந்தால் அவர்கள் உழுகின்றார்கள்.

நான் வர்த்தகம் நடத்தினால், அதற்காக அவர்கள் உழைக்கின்றார்கள் பொருள்களை வாங்குகின்றார்கள்.

ஆயுதப்படை, பொலீஸ் உடன் கூடாத அனுபவங்கள் எமக்கு உண்டு.

வயது போனவர்களைக் கூடப் பயங்கரவாதிகள் என்று கூறி அதிரடிப் படையினர் சிறைக்கு அனுப்பி இருக்கின்றனர்.

எமக்கு என்று உள்ளூர் அரசாங்கம் ஒன்றும் உள்ளூர்ப் பொலீஸ் படையும் தேவை.

அதுவரை இந்திய அமைதிப் படையினர் இங்கு இருக்க வேண்டியது அவசியம்.

இப்படி இப்ராஹிம் சொல்கின்றார்.

இருக்கும் நிலைமை பற்

5 ஆம் பக்கம் பார்க்க

## வாசகர் திருமுகம்

### பிரபாகரனுக்கு ஒரு வேண்டுகோள்

திரு. வே. பிரபாகரன் அவர்கட்கு,

மகாத்மா வழி அமைப்பின் தலைவர் என்ற முறையில் தங்களை மிகவும் தாழ்மையுடன் நான் வேண்டுவது:

எதிர்காலத்தில் தமிழ் மக்களின் ஐக்கியம், ஒருமைப்பாடு காப்பாற்றப்படவேண்டும். இதற்கு கடந்த காலத்தில் விடுதலை இயக்கங்கள் செய்த தவறுகளை உணர்ந்து — எதிர்காலத்தில் ஏற்படும் இரத்தக்களரிகளைத் தடுப்பதற்கும் நீங்கள் செய்யும் மாபெரும் பணியொன்று உண்டு. அது கடந்த காலத்தில் நடந்தவைகளை மறந்து திம்பு மாநாட்டில் எப்படி ஐக்கியமாக இருந்தீர்களோ — அது போல்— திம்பு மாநாட்டில பங்குபற்றிய சகல விடுதலை அமைப்புக்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அன்புடன் அழைத்து, உங்களுக்குள் ஒரு தலைவரை நியமித்து, எதிர்காலத்தில் தமிழ் மக்களின் ஐக்கியம், ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டும்,

இதைச் செய்யத் தவறும் பட்சத்தில் இது வரையில் செய்த போராட்டங்கள். தியாகங்கள் எல்லாமே பயனற்றனவேயாகும். அத்துடன் தமிழர் இன்னமும் சிரழிந்து விடுவர்.

சு. சத்தியசிலன்
தலைவர், மகாத்மா வழி அமைப்பு.

## பாட்டிமார்களுக்கு உடற்பயிற்சி மன்றம்

சோவியத் நாட்டில், உடல்ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக, ஏராளமான விளையாட்டுக் குழுக்கள், மன்றங்கள், குழுக்கள் போன்றவைகள் இயங்கிவருகின்றன.

நாடு முழுவதிலும் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் அமைப்புக்கள் இதுபோலஇருக்கின்றன.

இதில் கார்க்கி ஆட்டோமோட்டிவ் தொழிற்சாலையின் சார்பாக நடத்தப்படும் விளையாட்டுச் சங்கம் விசேடமானது. ஏனெனில் இங்கு 60 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு என தனியே ஒரு உடற்பயிற்சி விளையாட்டுக்குழு இயங்கி வருகிறது. இந்தக் குழுவில் உள்ள வயது முதிர்ந்த பெண்களில் பெரும்பாலோர் இந்தத் தொழிற்சாலையில் பணி புரிந்து ஓய்வு பெற்றவர்கள். சிலருக்கு வயது 70 கூட ஆகிறது. இருந்தபோதிலும் அவர்கள்அனைவரும் உடற்பயிற்சி விளையாட்டுக்களில் உற்சாகத்துடன் பங்கு பெறுகிறார்கள். குதியோட்டம், நடைப்பயிற்சி, மூட்டுகளுக்கு வலிமை தரு[illegible]



## பொய்யாமொழி

**குறள்:**

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

**பொருள்:**

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில்; பழி அன்று.

# யார் இந்தக் 'கிரிங்கோ?'

## பிலிப்பீன்ஸில் கொரஸோனைப் பதவிக்குக் கொண்டு வந்தவர் பின்பு வில்லனாக மாறினார்

யார் இந்தக் 'கிரிங்கோ'?

கடந்த 28ஆம் திகதி பிலிப்பீன்ஸில் தோல்வியில் முடிந்த இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து இந்தப் பெயர் எல்லோர் வாயிலும் அடிபடுகின்றது.

38வயதான இராணுவ அதிகாரி கேர்ணல் இர

> பிலிப்பீன்ஸில்ஜனாதிபதி கொரஸோனின் ஆட்சிக்குத் தலையிடியாக வந்திருப்பவர் இராணுவ அதிகாரி கேர்ணல் ஹொனசன்.
> இவர் 'கிரிங்கோ' என்று செல்லமாக அழைக்கப்படுகின்றார்.
> அண்மைப் புரட்சியைத் தொடர்ந்து தலைமறைவான 'கிரிங்கோ' தொடர்ந்து போராடப் போவதாக அறிவித்து இருக்கின்றார்.
> 'கிரிங்கோ' பற்றிக் கூறுகின்றது இந்தக் கட்டுரை.

கோரியோ பலஸ்ரெறஸ் ஹொனசன்.

இவர்தான் தோல்வியில் முடிந்த புரட்சியை நடத்தியவர்.

இவருக்கு நண்பர்களும் விசிறிகளும் வைத்த செல்லப் பெயர் தான் 'கிரிங்கோ'

அது மட்டுமல்ல-பிலிப்பீன்ஸ் இளவட்டங்கள், குறிப்பாகப் பெண்கள் மத்தியிலே கவர்ச்சி நிறைந்த ஆணழகனாகவும் இவர் விளங்குகின்றார்.

வெளியில் இவர் சென்றால் பெண்கள் சூழ்ந்து கொள்வார்கள். கையெழுத்தை வாங்க முண்டியடிப்பார்கள். கட்டிப் பிடித்து முத்தமும் இடுகின்றார்கள்.

திருமணமாகி மூன்று குழந்தைகளுக்குத் தந்தையானஇவர், ஆகஸ்ட் 28இல் தோல்வியில் முடிந்த புரட்சியைத் தொடர்ந்து தலைமறைவாகி விட்டார்.

ஆகஸ்ட் 28 அதிகாலை இவர் தலைமையில் 800 சிப்பாய்கள் ஜனாதிபதி கொரஸோனின் மாளிகையைச் சூழ்ந்து கொண்டனர். அதிகாலையில் தொடங்கிய புரட்சி மாலைக்குள் புஸ்வாணமாகி விட்டது.

தலைமறைவான அவர் கடந்த சனிக்கிழமை (5-9-87) பேர் தெரியாத வானொலி ஒன்றில் பிலிப்பீன்ஸ் மக்களுக்கு உரை நிகழ்த்தியிருக்கின்றார்.

"முன்னர் ஜனாதிபதியாக இருந்த பேர்டினன்ட் மார்க்கோஸின் ஆட்சியில் நிலவிய ஊழல்கள் கொரஸோன் ஆட்சியிலும் நிலவுகின்றன. இடதுசாரிப் போக்குள்ளவர்களினால்கொரஸோன் வழிநடத்தப்படுகின்றார். கொரஸோனின் ஆட்சியைக் கவிழ்க்கும் வரை தலைமறைவாக இருந்து போராட்டம் நடத்துவேன்" — இப்படி 'கிரிங்கோ' கூறுரைத் திருக்கின்றார்.

கொரஸோன ஆட்சிக்குத் 'தலையிடி'யாக வந்துள்ள கிரிங்கோ யார்? அவர் பின்னணி என்ன? இது பற்றிய தகவல்



அக்யூனோ

கள் வந்துள்ளன.

மார்கோஸைக் கவிழ்த்த மக்கள் புரட்சி 1986 பெப்ரவரியில் இடம்பெற்றது.

அதுதான் . கொரஸோன் அக்யூனேவைப் பதவிக்குக் கொண்டு வந்தது.

மார்கோஸின் ஆட்சி

**எஸ். ஜி.**

யில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் ஜுவான் என்றிலே. அவரின் வலதுகரமாக இருந்தவர்தான் இந்த 'கிரிங்கோ'.

என்றிலே மார்கோஸுக்கு எதிராக மாறிய போது மார்கோஸின் மாளிகையைச் சுற்றித் துருப்புக்களை நிறுத்தியவர் கிரிங்கோ.

இறுதியில் மார்கோஸ் வெளியேறினார். பின்னர் என்றிலே, திருமதி கொரஸோன் அக்கியூனேவுடன் சேர்ந்து ஆட்ப்சிபீடமேறினார். பாதுகாப்பு அமைச்சரானார்.

'கிரிங்கோ'வின் புரட்சிக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்று என்றிலே இப்போது கூறி விட்டார்.

**உருளும் உலகில்**

கடந்த ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற சதிமுயற்சி ஒன்றின் பின்னால் 'கிரிங்கோ' இருந்ததாக ஆயுதப்படைத் தளபதி பிடல் ராமோஸ் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்தே என்றிலேயை ஜனாதிபதி கொரஸோன் பதவி நீக்கஞ் செய்தார்.

அதன் பின்னர் 'கிரிங்கோ' புதிய பாதுகாப்பு அமைச்சர்ரபேல் இலடேஒாவுக்கு விசுவாசமதெரிவித்தார்.

ஆகஸ்ட் 28 புரட்சி

(5 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயாண ஒழுங்குகள்

## ★ குவைத் ★

✲ பின்வருவோருக்கான இறுதி நேர்முகப் பரீட்சை (Final Selection) கீழ் வரும் திகதிகளில் நடக்க இருப்பதால் யாபேரும் உடனே வந்து தங்களுக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

11-09-1987முதல் 14-09-1987வரை நேர்முகப் பரீட்சை நடைபெறும்

- LABOURERS
- H. V. DRIVERS
- H. E. OPERATOR
- H. E MECHANIC
  (Vehicle Repair Mechanic)
  (Engine Repair Mechanic)
- WELDERS
- ELECTRICIANS
- Leath Mechanic Operator
- MECHANIC HELPERS
- COOKS
- ASST-COOKS

✲ 09 - 09 - 1987 இல் இங்கிருந்து செல்ல இருப்பதால் யாபேரும் உடனே தொடர்பு கொள்ளவும்

✲ மேலும் Labourers தேவையாக இருப்பதால் 20 வயதுக்குமேற்பட்ட தேகாரோக்கியமுள்ள யாபேரும் 09-09-1987க்குப் பிந்தாமல் பின் வரும் ஆவணங்களுடன் வரவும்

✲ PASS PORT
✲ Pass port Photo Copy
✲ Service Certificate

★ PHOTO P. P. SIZE 10
★ சம்பளம்: 36 K.D.
★ கால எல்லை 4 வருடம்
★ உணவு, இருப்பிடவசதி, வைத்தியவசதி யாவும் இலவசம்

Head Office
Construction & Development Company Ltd.
37 S. DE. S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.

தொடர்பு:
V. P. Balasubramaniam
C/o N. V. Ponnuthurai
School Lane, Kondavil West, Kondavil.


வடக்கு — கிழக்கு

# இணைப்பு மூலமே தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## முஸ்லிம் பிரமுகர் கருத்து

அம்பாறை, செப் 8

வடக்கும் கிழக்கும்இணையும் போதுதான் இலங்கை முஸ்லிம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும். வடபகுதி மக்கள் எமக்கு விரோதிகள் அல்லர்.

அம்பாறை மாவட்டத்தின் பிரபல அரசியல் பிரமுகரும், சட்டத்தரணியுமான ஜனப். யூ. எல் எம் முகைடீன் மேற்கண்டவாறு கூறினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ பீ ஆர் எல். எப்) வீரமுனை (சம்மாந்துறை) கிராமிய ஒருங்கிணைப்பு செயலக திறப்பு விழா வைபவத்தில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. க. சபாநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் சட்டத்தரணி ஜனப். முகைடீன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

தமிழ்மக்களை முஸ்லிம் மக்கள் எதிர்த்துச்செயல்படமுடியாது. அதேபோல் முஸ்லிம்மக்களைத் தமிழ்மக்களும் எதிர்த்துச்செயல்படமுடியாது

இந்த இருசமூகங்களும் ஒன்றுபட்டுச்செயல் படுவதன் மூலமே நாம்சுபீட்சநிலையை அடைவதுடன், எம் மத்தியில் ஊடுருத்துவரும் சிங்கள ஆதிக்கத்தையும் முறியடிக்கலாம்.

போராளிக்குழுக் கள் தமக்குள் ஒற்றுமையை வலுப்படுத்த முன்வர வேண்டும்.

இன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம், தமிழ்மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளனர்.

கடந்த 30 வருட காலமாக அம்பாறை கச்சேரி இயங்கிவந்தும் இதுவரை ஒரு தமிழ் பேசும் மகன் கூட அரசாங்க அதிபராக நியமிக்கப்படவில்லை;

இலங்கையிலேயே தமிழ், முஸ்லிம் கடை ஒன்றில்லாத நகர் அம்பாறையே தான்.

வடக்கும், கிழக்கும் இணைவதன் மூலம் மட்டும்தான் எமது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விடிவு ஏற்படும் - இவ்வாறு அவர் கூறினர்.

ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா, கிழக்குப்பிராந்திய அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் திரு. பி கிருபாகரன், திரு. வரதராஜப் பெருமாள் உட்படப் பலர் உரையாற்றினர். (ஒ-14)

## காதல் கடிதத்துடன் சிப்பாயின் சடலம்

கொழும்பு, செப் 8

சண்டி இராணுவ முகாமில் சிப்பாய் ஒருவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

அவரின் அருகில் இயந்திரத் துப்பாக்கி ஒன்றும் 500 காதல் கடிதங்களும் கிடக்கக் காணப்பட்டன

இறந்த சிப்பாய் ஹஸலக என்றஇடத்தைசேர்ந்தவர். பெயர். ஜே. எ. ஏ விஜரத்தின.

கண்டிப் பொலீஸார் விசாரணை நடத்துகின்றனர். (ஒ-எ]

## கசிப்பு உற்பத்தியால் சமூக அபிவிருத்தி திட்டங்கள் அழிகின்றன

யாழ்ப்பாணம், செப் 8

கசிப்பு உற்பத்தி விற்பனை போன்றவற்றால் எமது சமூக அபிவிருத்தித் திட்டங்கள் அழியும் நிலையில் உள்ளன.

ஆகவே எமது சங்க அங்கத்தவர்கள் கசிப்பு உற்பத்தி விற்பனை போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு டரிஷ் தெங்கு-பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு யோ. செபஸ்தியாம்பிள்ளை கூறினர்.

அண்மையில் நடந்த சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

கசிப்பு உற்பத்தி விற்பனையைத் தவிர்ப்பதன் மூலம் எமது அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கள்ளினதும் மற்றும் உற்பத்திகளினதும் பெறுமதியை எதிர்காலத்திலும் அங்கத்தவர்களுக்குக் கடந்த காலம் போல வழங்க முடியும்.

கசிப்பை ஒழித்தால் எமது சமூகத்தையும் சங்கத்தையும் அழியாது பாதுகாக்கமுடியும்.

இவ்வாறு அவர் கூறினர். (ஒ)

## இளைஞர் குழுக்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம்

### உருவாக்கப்படும்என்கிறார்ரணில்

கிளிநொச்சி, செப். 8

சகல இளைஞர் குழுக்களுக்கும் புனர்வாழ்வுத் திட்டம் அமைப்போம். கல்வியை நிறுத்தியவர்களுக்குக் கல்வியைத் தொடரவும் ஜீவனோபாயத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு அதற்கான வழிகளும் அமைக்கப்படும்.

இவ்வாறு கிளிநொச்சி இளைஞர் சேவைப்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய கல்வி அமைச்சரும் இளைஞர் விவகார வேலை வாய்ப்பு அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கா தமது உரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இளைஞர்கள் மத்தியில் சேவைமனப் பாங்கினை வளர்க்கும் நோக்குடன் இளைஞர் சேவை மன்றங்களுடாக உதவி ஆசிரியர்களை எடுத்து அவர்களை நான்கு வருடத்தின் பின் கல்வி அமைச்சுடன் இணைக்கவுள்ளோம். ஆசிரியர்களும் சேவைமனப் பான்மை கொண்டிருக்க வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் எடுக்கப்பட்டவர்களுக்குத் தற்போது கிளி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தகவல் ஏதுமில்லை



யாழ்ப்பாணம், செப் 8

கடந்த வாரம் மட்டுவிலில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் கே.பிரேமானந்தா குறித்து இதுவரை நம்பிக்கையான தகவல் ஏதும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ பி. ஆர், எல். எவ் பிரமுகர் டக்லஸ் தேவானந்தாவின் சகோதரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### மக்கள் முகம்

## பயணமானர்

திருநெல்வேலி, செப் 8

திருநெல்வேலி அரசடி வீதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி- மனோன்மணி தம்பதிகளின் புதல்வன் கோபிநாத் கம்பியூட்டர் பொறியியல் துறையில் புலமைப்பரிசில் பெற்று ரஷ்யாவிற்குப் பயணமானர்.

யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ. சீ ஈ. (சாதாரண) பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று முதல் மாணவராக விளங்கினர்.

கம்பியூட்டர் பொறியியலாளராக மேற்படிப்பைத் தொடர தெரிவு செய்யப்பட்டவர்களுள் இவர் ஒருவரே தமிழ் மாணவராவார். (ஒ-143)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## வடக்கு கிழக்கில் நஷ்ட ஈடு வழங்க அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப் 8

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வன்செயல்களினல் இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் புனர்வாழ்வு அமைச்சு நஷ்டஈடு வழங்கவுள்ளது.

நஷ்டஈடு வழங்குவதற்காக இறந்தவர்கள், காயமடைந்தவர்களின் விபரங்களை புனர்வாழ்வு அமைச்சு திரட்டவுள்ளது.

இதற்கான விவரங்களை பாதிப்படைந்தவர்களே புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதுபற்றிய முழுவிவரங்களையும் புனர்வாழ்வு அமைச்சு ஓரிரு தினங்களில் பொதுமக்களுக்கு அறிவிக்கும் என யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

## ஆஸ்பத்திரி அடிக்கடி இருளில்

அனலைதீவு, செப். 8

அனலைதீவு அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவந்த மின்சார சபைக்குச் சொந்தமான இயந்திரம் பழுதடைந்தமையால் இரவில் வைத்தியசாலை இருளில் மூழ்குகிறது நோயாளர் இதனல் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இது பற்றி பலமுறை மின்சார சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

## சர்வதேச எழுத்தறிவு தினம்

மானிப்பாய் செப் 8

இன்று செவ்வாய்க்கிழமைசர்வதேச எழுத்தறிவுத்தினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்த எழுத்தறிவுத் தினத்தை சகல பாடசாலைகளிலும் கொண்டாடி அதன் அறிக்கையை எமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணம் பிரதேசக்கல்விப் பணிப்பாளர் ஜனப். எம் எம். மன்சூர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார். [ஒ-90]

## காணமற் போனவர் இன்னும் வீடு வரவில்லையா? விவரத்தை உடனே அறிவிக்கவும்

யாழ்ப்பாணம் செப் 8

தடுப்புக்காவலில் உள்ள அனைவரும் விடுவிக்கப்பட்ட பின்னரும், காணமற் போனவர்கள் என கணிக்கப்பட்டவர்கள் வீடு வந்து சேராவிடில் அவர்கள் பற்றிய விவரங்களை வவுனியா பிரசைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி என். எம் எக்ஸ் சொர்ணபாலாவிடம் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இந் நடவடிக்கை திரு. சொர்ணபாலாவினல் மேற்கொள்ளப்படுகிறது.

தகவல்கள் உடனடியாக சர்வதேச மன்னிப்புச்சபைக்கு அனுப்பி வைக்கப்படும்.

சம்பந்தப்பட்டவர்கள் காணமற் போனவரின் முழுப்பெயர், கைது செய்யப்பட்ட திகதி, கைது செய்யப்பட்ட இடம் என்பன போன்ற விவரங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

இதேவேளை காணமற் போனவர் எனக்கருதப்பட்டவர்களில் யாராவது விடுவிக்கப்பட்டிருப்பின் அவர்கள் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து விடுவிக்கப்பட்ட நாள்வரை நிகழ்ந்தவற்றை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பி வைக்கும்படியும் கேட்கப் பட்டுள்ளது. [ஒ]


# Science Academy - Jaffna

(வெலிங்டன் சந்தி, B. M. C. க்கு முன்பாக)

DAY CLASS ஆரம்பம் நாளை முதல் 8 . 15 A. M

காலை 8-15 மணி PHYSICS - மணியம் B. Sc
„ 9 15 „ CHEMISTRY - ரஞ்சன் B. Sc.
„ 10-30 „ APPLIED - பிரேம்நாத் B. Sc.

10-30 மணி BOTANY -குணசீலன் B. Sc.
11-30 ZOOLOGY இளங்கோவன் B.Sc.
11-30 PURE MATHS பிறேம்நாத் B. Sc.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

வறுமை அல்ல துன்பம்: சிறுமையே துன்பம் வறுமையிலும் பெருமையுடன் வாழலாம். அயோக்கியத்தனங்கள் வேண்டாம். திருட்டு, பொய் முதலிய பயங்கொள்ளி நீச சுபாவங்கள் வேண்டாம்.

— ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22075

08.9.1987


## பொருளியல் மீள்விப்பு

வடக்குக் கிழக்கில் கடந்த நான்கு வருடங்களாக இடம்பெற்ற அனர்த்தங்களால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தார்கள்; கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாகின. மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பல அத்தியாவசிய சேவைகள் தடங்கலுற்றன.

இவற்றைவிட, தமிழர்களின் பொருளாதாரம் சகல வகைகளாலும், எல்லாத்துறைகளிலும் பாதிப்பு அடைந்து, பூஜ்ஜிய நிலைக்கு சரித்து வீழ்த்தப்பட்டது.

கிழக்கின் பிரதான பொருளீட்டும் துறையான விவசாயம், வடக்கின் பிரதான பொருளீட்டும் துறையான மீன்பிடித் தொழில் மற்றும் கைத்தொழில்கள் யாவும் முற்றாக முடங்கிப் போயிருந்தன.

உற்பத்தித் துறைகள் வீழ்ந்து படுக்கும் போது, சிறுவியாபாரம், பெருவர்த்தகம் ஆகிய துறைகள் எங்ஙனம் செயற்படுவது? அவையும் மூச்சிழந்து இயக்கமற்றுப் போயின.

மொத்தத்தில் வடக்கு கிழக்கு அடங்கிய தமிழர் பிரதேசங்களில் உற்பத்தித்துறை தொடக்கம் சிறு வியாபாரம் வரை பாதிப்புற்றன என்று சொல்வதை விட முற்றாக அற்றுப்போயிருந்தன என்பதே பொருத்தமானது ஆகும்.

இது அரசாங்கத்துக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அத்தனை சேதங்கள், நஷ்டங்கள் மத்தியிலும் போரைத் தொடர உத்தரவிட்ட ஜனாதிபதி முதற்கொண்டு பந்தோபஸ்து அமைச்சர் வரை, சகலருக்கும் தெரிந்திருக்கும். வடக்கு கிழக்கின் பொருளாதாரம் நசிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டும் அவர்கள் போரைத் தொடர்ந்தார்கள்.

தமிழர் பிரதேசங்களில் பொருளாதாரத்தை நசுக்குவதன் மூலம் தமிழர்களை அடிபணிய வைக்கலாம் எனவும் அவர்கள் தப்புக் கணக்குப் போட்டது உண்டு. வட பகுதி மீது எரிபொருள் தடை விதித்த ஒரு செயலே அரசின் தவறான நடத்தைக்கு நல்ல உதாரணமாக விளங்கியது. உலக நாடுகளே அந்த நடவடிக்கையைக் கண்டித்திருந்தன.

யுத்தத்தைத் தொடர்வதால், வடக்கு கிழக்கில் அரச பயங்கரவாதத்தை நடத்துவதால், நாட்டின் பொருளாதாரம் பாழாகிறது, சீரழிகிறது என்பதை மிகத் துணிச்சலுடன் எடுத்துக் கூறிவந்தவர் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல.

பாதுகாப்புச் செலவுக்காக நாளாந்தம் கோடிக் கணக்கில் செலவிட்டது ஒரு நட்டம்.

வெற்றி காணப்படாத யுத்தமாகவே அது முடிவுற்றதால் நான்கு வருடங்களாக அதற்குச் செலவிடப்பட்ட கோடானுகோடி ரூபா விழலுக்கு இறைத்த நீராகியது. நாட்டுக்கு ஏற்பட்ட முதலாவது பெரு நட்டம்—

உடைமைச் சேதங்களால் ஏற்பட்டது இரண்டாவது நட்டம்—

இனிமேல் புனர்நிர்மாணம், புனர்வாழ்வு பொருளாதார மீள்விப்பு ஆகியவற்றுக்குச் செலவாகவுள்ள பெருந்தொகையும் தேவையற்றசெலவு! நட்டம் — இது மூன்றாவது நட்டம்.

அதாவது யுத்தத்தின் மூலம் அழிவுகள் ஏற்படுத்தப்படாமல் இருந்திருப்பின், புனர் நிர்மாண, புனர்வாழ்வுக்குரிய செலவுகள் ஏற்பட்டிருக்கமாட்டா.

தமிழர்களின் உரிமைகளை வழங்கி யுத்தத்தை நிறுத்தி இருப்பின் இந்த முப்பெரும் நட்டங்களைத் தவிர்த்திருக்கலாம். இப்போதாவது அரசாங்கம் அதனை யதார்த்தபூர்வமாக உணரும் என்று நம்புகிறோம்.

எதற்கும் வடக்கு, கிழக்கில் புனர் நிர்மாணம், புனர்வாழ்வு ஆகியவற்றை மேற்கொள்ள இருக்கும் அரசாங்கம் பொருளாதாரத் துறையில் பாதிக்கப்பட்ட விவசாயி தொடக்கம் வர்த்தகர் வரைக்கும் நிவாரணம், மற்றும் சலுகைகள் உதவிகளை வழங்கியாக வேண்டும். தான்விட்ட தவறுக்குத் தண்டனையாக — தண்டமாக — நிதி உதவி நிதிச் சலுகைகளை வழங்கியாக வேண்டும்

இந்த வகையில் வடக்கு - கிழக்கு வரியிறுப்பாளர் சங்கம் நிதி அமைச்சரிடம் விடுக்க இருக்கும் கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவை.

பாதிப்படைந்தவர்களுக்கு வரிப்பளு நீக்கம், வரிசெலுத்தாமைக்கு அபராதம் விதிக்காமை, புதிதாகத் தொடங்கப்படும் கைத்தொழில்களுக்கு வரிவிலக்கு, வட்டி இல்லாக் கடன் கொடுத்தல் ஆகிய சலுகைகளை வழங்குவது அரசின் கடமை ஆகும்.

இவ்வாறான சலுகைகள் இன்றி வடக்கு, கிழக்கில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதும், புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளுவதும் கடினமாகும்.

நியாயத்தை இலகுவில் புரிந்து கொள்ளும் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் முன் சொன்ன சலுகைகளை நிச்சயம் வழங்குவார் என நம்புகிறோம்.

# கிழக்கு ஜேர்மன் தலைவர் மேற்கு ஜேர்மன் பயணம்

## சரித்திரப் பிரசித்தி பெற்ற சந்திப்பு

பொன், செப. 7

கிழக்கு ஜேர்மன் ஜனாதிபதி எரிச் ஹொனகனேக்கர் ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கு ஜேர்மனிக்கு மேற்கொண்டிருக்கின்றார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து ஜேர்மனி மேற்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி என்று இரண்டாகப் பிரிந்தது.

அதன் பின்னர் கிழக்கு ஜேர்மன் அரசுத் தலைவர் ஒருவர் மேற்கு ஜேர்மனுக்குச் செல்வது இதுவே முதல்தடவை.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த விஜயத்தின்போது கிழக்கு — மேற்கு ஜேர்மன் தலைவர்கள் மூன்று ஒப்பந்தங்களைச் செய்து கொள்வர்.

விஞ்ஞான, சுற்றுப் புறச்சூழல், அணுசக்தி ஆகிய மூன்று துறைகள் சம்பந்தமாக இந்த ஒப்பந்தங்கள் செய்யப்படும்.

இரண்டு தினங்கள் பொன் நகரில் தங்கியிருந்து மேற்கு ஜேர்மன் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு மேற்கு ஜேர்மனியின் ஏனைய இடங்களுக்குக் கிழக்கு ஜேர்மன் அதிபர் விஜயம் செய்வார்

அப்போது தனது சொந்த ஊருக்கும் செல்வார் அவர் பிறந்த இடம் மேற்கு ஜேர்மனியில் உள்ளது.

மேற்கு ஜேர்மனிக்கு விஜயம் செய்ய கிழக்கு ஜேர்மன் தலைவர் முன்னர் இரண்டு தரம் முயற்சி எடுத்தார். சோவியத்தின் நிர்ப்பந்தம் காரணமாக அம்முயற்சிகள் கைகூடவில்லை

இப்போது சோவியத் தலைவர் கோர்பச்சேவின் ஆசியுடனே விஜயத்தை மேற்கொண்டிருக்கின்றார்.

* மனித உரிமைகள் மீறப்படுவது.

* பேர்லின் சுவரைத் தாண்டும் கிழக்கு ஜேர்மன் வாசிகளைக் கண்டவுடன் சுடும்படி கிழக்கு ஜேர்மன் அரசு விடுத்துள்ள உத்தரவு.

இந்த விஷயங்கள் இரண்டு தலைவர்களின் பேச்சுக்களில் முக்கியத்துவம் பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது (இ-எ)

## சரித்திரப் பிரசித்தி பெற்ற பேர்லின் சுவர் தரைமட்டமாக்கப்பட வேண்டும்

### கார்டியன் கருத்து

பொன், செப் 7

கிழக்கு - மேற்கு ஜேர்மன் தலைவர்களின் சரித்திரப்பிரசித்திபெற்ற சந்திப்பு சரித்திரப் பிரசித்தி பெற்ற பேர்லின் சுவரைத் தரைமட்டமாக்குவதாகஅமையவேண்டும்.

இப்படி லண்டன் கார்டியன் பத்திரிகையின் திங்கட்கிழமைப்பதிப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

லண்டன் ரைம்ஸ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருப்பதாவது;

மேற்கு - கிழக்கு ஜேர்மன் தலைவர்களின் சந்திப்பு ஆக்கபூர்வமான பலனைக் கொடுக்க வேண்டும்.

இல்லாவிடில் வயது முதிர்ந்த ஒருகம்யூனிஸ்ட் தலைவர் தான் பிறந்த பூமியைப் பார்த்து வர மேற்கொண்ட புனித பயணமாகவே இவ்விஜயம் முடியும்

லண்டன் டெயிலி ரலிகிராப் தனது தலையங்கத்தில்,

''கிழக்கு ஜேர்மன் தலைவரின் மேற்கு ஜேர்மன் விஜயத்தில் சிறிது பலன்தான் கிடைக்கும்.

கிழக்குஜேர்மன் தலைவருக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தை மேற்கு ஜேர்மன் வழங்கியதாகவே அது முடியும்'' — என்று தெரிவித்திருக்கிறது.

**வெளி உலகில்**

## சமாதானத்துக்கான நோபல் பரிசு யாருக்குக் கிடைக்கும்?

### 13 ஆம் திகதி தெரியும்

ஸ்டொக்ஹோம், செப். 7

சமாதானத்துக்கான நோபல் பரிசு யாருக்குக் கிடைக்கும் என்பது அடுத்த மாதம் 13ஆம் திகதி தெரியவரும்.

இப்படி நோபல் நிறுவனம் அறிவித்திருக்கின்றது நோபல்சமாதானப் பரிசுக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஆகியோரின் பெயர்கள் கூட்டாக சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்க காங்கிரஸின் ஆசிய, பசுபிக் பிராந்திய உபகமிட்டித் தலைவரான ஸ்ரீபன் ஸோர்லார்ஸ் நோபல் சமாதானப் பரிசுத் தெரிவுக் கமிட்டிக்குக் கடிதம் அனுப்பியிருக்கின்றார்.

''இந்தஆண்டின் சமாதானப் பரிசுக்கு பிரதமர் ராஜீவ்காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஆகியோரின் பெயர்களை நியமிக்கின்றேன். இரண்டு தலைவர்களும் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்தே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கி இலங்கையில் அமைதியைக் கொண்டு வந்திருக்கின்றார்கள்''— இப்படி திரு. ஸ்டீபன் ஸோலார்ஸ் கடிதத்தில் கூறியிருக்கின்றார். [இ-எ]

## காட்டுத் தீ! இருவர் மரணம்

வாஷிங்டன், செப் 7

அமெரிக்காவின் ஏழு மாநிலங்களில் பரவி வரும் காட்டுத் தீயில் இரண்டு பேர் பலியாகினர். 43 ஆயிரம் ஏக்கர் பிரதேசம் சேதமடைந்தது.

ஏழு மாநிலங்களிலு இரண்டாயிரம் இடங்களில் தீப்பற்றிக்கொண்டது (இ-எ)

## ஆர்ஜென்ரீனா தேர்தல்

புவனர்ஸ் அயர்ஸ் செப்.7

ஆர்ஜென்ரீனாவின் கீழ்சபைக்கு நடந்த தேர்தலில் ஜனாதிபதி அல்போன்ஸினின் ஆளும் கட்சிக்குக் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் 21 கவர்னர்களைத் தெரிவுசெய்யும் தேர்தலும் கீழ்சபைத் தேர்தலுடன் கடந்த ஞாயிறுக்கிழமை நடந்தது. (இ-எ)

## லிபிய தளம் சாட் அரசின் கட்டுப்பாட்டில்?

திரிபோலி, செப் 7

லிபிய விமானப்படைத் தளம் ஒன்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக சாட் அரசு அறிவித்துள்ளது.

இதை லிபிய அரசு மறுத்துள்ளது.

'தாக்கியது உண்மை. ஆனால் சாட் படைகளை நாம் துரத்தி அடித்து விட்டோம்' — என்று லிபிய அரசு தெரிவித்துள்ளது.

முரண்பாடான இச் செய்திகளின் மத்தியில் சாட் - லிபிய மோதல் வலுப்பெற்று வருகின்றது. (இ-எ)

## உடன்படிக்கை: ஸ்பெயின் ரத்துச் செய்யும்

மாட்ரிட், செப் 7

அமெரிக்காவுடனான 31 வருட கால இராணுவக் கூட்டுறவு உடன்படிக்கையை ரத்துச் செய்யப்போவதாக ஸ்பெயின் அறிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கை 1988 மே மாதத்துடன் காலாவதியாகும்

உடன்படிக்கையை ரத்துச் செய்யப்போகும் அறிவித்தலை ஸ்பெயின் அரசு எதிர்வரும் நவம்பரில் அமெரிக்காவுக்கு அறிவிக்கும்- (இ-எ)

## சயாம் இரட்டையரை வெற்றிகரமாக டாக்டர்கள் பிரித்தனர்!

பொன், செப். 8

மேற்கு ஜேர்மன் ஆஸ்பத்திரி ஒன்றில் சயாம் இரட்டைக் குழந்தைகளைச் சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாக டாக்டர்கள் பிரித்தெடுத்தனர்.

22½ மணித்தியாலங்கள் இந்தச் சத்திர சிகிச்சை நீடித்தது

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்தது

டாக்டர்கள், நர்ஸுகள் கொண்ட விசேட குழு ஒன்று இச் சத்திர சிகிச்சையை மேற்கொண்டது.

இரண்டு குழந்தைகளின் தலைகளும் பின்பக்கமாக ஒட்டப்பட்டிருந்தன.

தலைகளுக்கு இரத்தத்தை ஓர் இரத்தக் குழாயே கொண்டு வருவதாக அமைந்திருந்தது.

இதனைச் சத்திர சிகிச்சை மூலம் டாக்டர்கள் வெற்றிகரமாகப் பிரித்தெடுத்தனர்.

குழந்தைகள் உயிருடன் இருப்பதாக திங்கள் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## குவைத்தைப் பழிவாங்குவோம

### ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான், செப் 7

குவைத் நாட்டைப் பழிவாங்கப் போவதாக ஈரான் எச்சரித்துள்ளது.

ஏழு ஆண்டு கால வளைகுடாப் போரில் குவைத் ஈராக்கை ஆதரித்து வந்துள்ளது.

இதற்காகவே குவைத் பழிவாங்கப்படும் என்று ஈரான் பிரதமர் கடந்த ஞாயிறு அறிவித்தார்.

நீண்ட தூர ஏவுகணைத் தாக்குதல் ஒன்றை குவைத் மீது ஈரான் நடத்தியதாக ஐ. நாவிடம் முறையிடப்பட்டது.

முறைப்பாடு செய்ததுடன் ஐந்து ஈரானிய இராஜதந்திரிகளையும் குவைத் நாடு கடத்தியது.

இதைத்தொடர்ந்து பழிவாங்கும் எச்சரிக்கையை ஈரான் வெளியிட்டிருக்கின்றது.

''குவைத்தின் போக்கு ஈரானை பொறுமை இழக்கச் செய்து விட்டது. வளைகுடாப் போரில் நடுநிலைமை வகித்தால் மட்டுமே குவைத்துக்கு மன்னிப்பு வழங்கப்படும். செய்த பாவங்கள் மறக்கப்படும் நீதிக்கு ஆதரவளித்தால் குவைத்துடன் சிநேகமாக இருப்போம்''—இப்படி ஈரான் பிரதமர் அறிவித்தார்.

ஈரானிய ராஜதந்திரிகளை வெளியேற்றியதன் மூலம் குவைத் பெரிய தவறு இழைத்து விட்டது''- என்று சொன்ன ஈரான் பிரதமர், இதற்கு விரைவில் பதிலடி கொடுப்போம்''- என்றும் கூறுரைத்தார். [இ-எ]

## பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்ட் பயமுறுத்து

மணிலா, செப். 7

பிலிப்பீன்ஸ் இராணுவத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்தி இராணுவ இலக்குகள் மீது தாக்குதல்களை அதிகரிக்கப் போவதாக கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்துள்ளனர். (இ-எ)

## மேலும் ஆறு கண்ணிவாரி கப்பல்கள்

வாஷிங்டன், செப். 7

வளைகுடாவுக்கு அமெரிக்க அரசு மேலும் ஆறு கண்ணிவாரிக் கப்பல்களை அனுப்பிவைத்துள்ளது.

ஏற்கனவே ஏழு அமெரிக்கக் கண்ணிவாரிக கப்பல்கள் வளைகுடாவில் நிற்கின்றன. (இ-எ)

## இளைஞர்----

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது. தமிழ்ப் பிரதேசத்தில் நல்ல சூழ்நிலை இல்ல தனையே இப்பயிற்சி ஆரம்பிக்கத் தாமதமாகியது

சகலரது பிரச்சினைகளும் தீர வேண்டும். கட்டடப்புனரமைப்பு. இளைஞர் புனரமைப்புப் பற்றி யோசித்துள்ளேன். இதனைவிட வெவ்வேறு குழுக்களாகவுள்ளவர்களுக்கும் புனருத்தாரணத் திட்டம் அமைப்போம். இளைஞர்களது வேலைவாய்ப்புகள் பற்றிப் புதிய துறைகள் ஆராயப்படும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் அமைதி - சமாதானம் நிலவும். உடனடியாக வன்செயல்கள் நிறுத்தப்படும். தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும். இதனை நடைமுறைப்படுத்த இந்திய அரசு ஒத்துழைக்கும். சகல இராணுவத்தினரும் முகாமிற்குள் இருப்பர். இளைஞர்கள் ஆயுதங்களைக் கையளிப்பார்.

## யார் இந்த---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றபோது கிரிங்கோ பிலிப்பீன்ஸ் இராணுவப்படையின் பிரதம பயிற்சி அதிகாரியாகக் கடமையாற்றினார்.

மார்கோஸை பதவி கவிழ்த்த 1986 பெப்ரவரி மக்கள் புரட்சியின் போது கதாநாயகனாக ஜனாதிபதி கொரஸோனால் வர்ணிக்கப்பட்டவர் ஆகஸ்ட் 28 புரட்சியைத் தொடர்ந்து 'வில்லன்' ஆகிவிட்டார்.

'வில்லன்' கிரிங்கோ இனி கொரஸோனுக்கு நிரந்தரத் தலையிடியாக இருப்பாரா?

இதை கொரஸோனின் கடும் நடவடிக்கை மட்டுமல்ல மக்கள், ஆயுதபடையினர் மத்தியில் 'கிரிங்கோ'வுக்கு இருக்கும் ஆதரவும்தான் தீர்மானிக்கவேண்டும். (இ-எ)

சாதாரண பொலிஸ் அமைப்பு இயங்கி சிவில் நிர்வாகம் நடக்கும். இவ்வாறு அவர் கூறினார். (இ-எ)

# சமாதானத்தை நிலைநிறுத்த அனைவரும் பாடுபடவேண்டும்

### நளின் செனவிரத்ன கூறுகிறார்

கொழும்பு, செப் 8

செந்நீரும் கண்ணீரும் சிந்திய காலம் முடிந்து விட்டது. சமாதானம் வந்துள்ளது: அதை நிலை நிறுத்த அனைவரும் பாடுபடவேண்டும்

இப்படிச் சொன்னார் இலங்கை இராணுவத் தளபதி நளின் செனவிரத்ன.

தியத்தலாவை இராணுவப் பயிற்சி நிலையத்தில் சிப்பாய் ஒருவரின் சிலையைத் திரை நீக்கம் செய்து வைத்தார் இராணுவத் தளபதி

அவர் மேலும் சொன்னதாவது:

நாட்டின் ஜனநாயக ரீதியிலான நிர்வாக அமைப்பில் பெரிய மாற்றங்கள் ஏற்படவிருப்பதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைப்பற்றி ஆராய்வது எமது வேலை அல்ல. அதை நாம் மறந்து விடுவோம்.

மக்களால் தெரிவு செய்யப்படும் எந்த அரசுக்கும் நாம் விசுவாசமாகப்பணி புரிய வேண்டும்.

அரசியலில் படையினரான எமக்கு வாக்களிக்கும் உரிமை மட்டும் தான் உண்டு.

யுத்தம் முடிந்து விட்டது என்ன நடக்கின்றது என்பதைப் பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.

அமைதி வந்து விட்டது; இனி ஆயுதப்படையினர் தேவை இல்லை என்று எவராவது சொன்னால் அதை நான் ஏற்க மாட்டேன்

ஒரு நாடு சிறியதாக இருக்கலாம்; பெரியதாக இருக்கலாம். ஆனால் ஆயுதப்படை நாட்டுக்குத் தேவை.

பொலீஸுக்கும் இராணுவத்துக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியது பொலீஸாரின் கடமை.

நாட்டைப் பாதுகாக்க வேண்டியது இராணுவத்தின் கடமை.

இப்படி இராணுவத் தளபதி சொன்னார். (இ-எ)

## இணைப்புத்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றிய நேர்மையான தொகுப்பு இது.

தமிழர்கள் சிதறுண்டு வாழ்கின்றனர். காணாமற் போனவர்கள், சிறையில் இருப்பவர்களின் வருகையை எதிர் பார்த்து இருக்கின்றார்கள்.

கைதிகள் விடுதலை செய்யப்படுவதாக ஒவ்வொரு நாளும் கூறப்படுகின்றது ஆனால் பலர் தங்கள் அன்புக்குரியவர்களின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். (உ-எ)

## பிருந்தாவன பிரவேச விழா

யாழ்ப்பாணம், செப். 8

பூஜ்ய ஸ்ரீ - ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் ப்ருந்தாவன பிரவேச விழா நாளை 9-ஆம் திகதி தொடக்கம் 11-ஆம் திகதி வரை 159/A, கோவில் வீதி, நல்லூரில் நடைபெறும்.

நல்லை ஆதீனம் குரு மஹா சந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் முதல்நாள் விழாவை மாலை 4-30 மணியளவில் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்

மாலை 6-00 மணியளவில் விசேஷ ஆராதனை நடைபெற்று அஷ்டோத்தர நாம பூஜை நடைபெறும். [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bitsmans Institutes
MANIPAY.
89 A/L பொது இரசாயனம்
(GENERAL CHEMISTRY)
ஆசிரியர்:
திரு. தில்லைநாதன் B.Sc. (Hons)

# உதயன்

08 09 1987 செவ்வாய்க்கிழமை

Bitsmans Institutes
MANIPAY.
88 A/L சேதன இரசாயனம்
(ORGANIC)
ஆசிரியர்: திரு. மகாதேவா B.Sc. (Hons)

## லலித்துக்கு மூன்றாவது சத்திர சிகிச்சை

கொழும்பு, செப். 8
அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கு மூன்றாவது சத்திரசிகிச்சை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் இச் சத்திரசிகிச்சை இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து தீவிர கண்காணிப்புப் பிரிவில் அமைச்சர் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். பார்வையாளர் அனுமதிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. (இ-எ)

# ஒப்பந்தத்துக்கு எதிராக நாடு தழுவிய பிரசாரம்

## 3 கட்சிகள் கூட்டாக நடத்தும்

கொழும்பு, செப். 8
இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக நாடு தழுவிய பிரசார இயக்கமொன்றை சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி ஆகியன கூட்டாக மேற்கொள்ளவிருக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு ரோஸ்மீட் பிளேஸ் வீட்டில் இந்த மூன்று கட்சிகளின் தலைவர்களும் கூடிப் பேசினர்.

அப்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது. பிரசார இயக்கத்தை நடத்துவதற்காக கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டது.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா, திரு ருக்மன் சேனநாயக்கா, டாக்டர் காமினி விஜயசேகரா, திரு தினேஷ் குணவர்தன ஆகியோர் கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்கமிட்டி அடுத்த வாரம் கூடி செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்.

ஒப்பந்தத்துடன் பத்திரிகைத் தணிக்கை, அடக்குமுறை, ஜனநாயக உரிமைகளை மறுப்பது ஆகியவற்றையும் இம் மூக்கூட்டு முன்னணி எதிர்த்துச் செயல்படும். (இ-எ)

## முன்னாள் உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, செப். 8
கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெல்லம்பிட்டியாவில் கொட்டுவில என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இவரின் பெயர் மஹிந்த பதிரான. இவர் முன்னர் ஜே. வி. பி. இயக்கத்தில் இருந்தார். 1971 கிளர்ச்சியின்போது இவர் தண்டிக்கப்பட்டார்.

அரசு வழங்கிய பொது மன்னிப்பின் கீழ் இவர் விடுதலையானார். அதன் பின்னர் அரசாங்கத்தின் ஆதரவாளராக மாறினார்.

அரசு ஆதரவாளராக மாறியதே கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# வவுனியாவில் ஞாயிறும் கொலை, கடத்தல், தீவைப்பு

யாழ்ப்பாணம், செப். 8
வவுனியாவில் புலிகள் ஆதரவாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டும், மற்றும் பல ஆதரவாளர்கள் கடத்தப்பட்டும் ஆரம்ப பாடசாலை ஒன்று எரிக்கப்பட்டும் ஞாயிற்றுக்கிழமை மேலும் வன்செயல்கள் நடந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஞாயிறு 2 மணியளவில் நப்பைக்குளம் என்ற இடத்தில் வைத்து ஒரு மரக் கண்டியில் எமது ஆதரவாளர் பலரை சமூக விரோதக் கும்பல்கள் கடத்திச் சென்றுள்ளன.

அதே தினம் நைனாமடுவில் உள்ள எமது ஆதரவாளர் வீட்டில் இருந்த எமது உறுப்பினர்களின் படங்களைச் சாப்பிடுமாறு கூறி எமது ஆதரவாளர் தாக்கப்பட்டுள்ளார். மிகுதிப் படங்களை எரித்து விட்டுச் சென்றுள்ளனர்.

சாப்புக் கொத்தி என்னும் இடத்தில் எமது உதவியாளர் ஒருவரின் டிராக்டர் ஒன்றை கடத்திச் சென்றுள்ளனர் எம்மால் நிர்வகிக்கப்படும் பாலர் பாடசாலைக்கு நெருப்பு வைத்து எரித்துள்ளனர்.

நெடுங்கேணியில் எமது உறுப்பினர் அமீன், கிருபா ஆகியோரை இதே தினம் பிடித்துக் கொண்டு போக முயன்றனர். இதை எதிர்த்த அமீன் சுட்டுக் கொல்லப்பட்டார். கிருபாவின் நிலைமை தெரியவில்லை.

படுகொலை செய்யப்பட்ட அமீனின் உடலை மக்களின் உதவியுடன் மாங்குளம் பொலீசார் எடுத்துச் சென்றுள்ளனர்.

திங்களன்று ஒட்டுசுட்டானில் எமது உறுப்பினர் ஜோசப் சென்று கொண்டிருந்த சமயம் டிரக்டரில் வந்த சமூக விரோதக் கும்பல்கள் தாக்கிவிட்டு ஏற்றிச் செல்ல முயன்ற சமயம் அவர் சயனற்றை கடித்தார். அவர் இறந்துவிட்டதாக நினைத்து அவர்கள் சென்றுவிட்டார்கள். ஆனால் அவர் சிறுகாயங்களுடன் தப்பிவிட்டார்.

இவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

## மந்திரி முஹம்மதுவை பிரயாணிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்திப்பர்

யாழ்ப்பாணம், செப். 8
போக்குவரத்து, தனியார் மினிபஸ் போக்குவரத்துச்சபை அமைச்சர் அல்ஹாஜ் எம் எச். முகம்மதுவை, பிரயாணிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரயாணிகள் சங்கங்கள் தத்தமது குறைகளை மகஜர் மூலம் தெரிவிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் செய்துள்ளார்.

போக்குவரத்துச் சம்பந்தமான குறைபாடுகளை மகஜர் மூலம் அளிக்க விரும்புபவர்கள் நாளை 9 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கேபாலரத்தினத்தை மகஜரின் நகல் பிரதியுடன் சந்திக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

அமைச்சர் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். (இ-ஒ)

## நவீன ஆயுதங்களை வாங்கும் திட்டம் கைவிடப்படவேண்டியநிலையில்

கொழும்பு, செப். 8
இலங்கை ஆயுதப் படையினருக்கு நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய போடப்பட்டிருந்த திட்டங்களைக் கைவிடவேண்டிய நிலை பாதுகாப்பு வட்டாரங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பாரம் குறைந்த டாங்கிகள், தரைத் தாக்குதலைச் சிறந்த முறையில் மேற்கொள்ள உதவும் விமானங்கள் ஆகியவற்றை வாங்க ஆயுதப் படை திட்டம் தீட்டியிருந்தது.

இதற்காக 25 கோடி ரூபா பணமும் ஒதுக்கப்பட்டிருந்தது.

இப்போது அத்திட்டங்களைக் கைவிட வேண்டிய நிலை பாதுகாப்பு வட்டாரங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் காரணம் இந்திய—இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானமையே ஆகும் (இ-எ)

## ஒப்பந்தம் முன்னரே கைச்சாத்தாகி இருந்தால் இலங்கைக்கு அதிகபயன்

கொழும்பு, செப் 8
1983 அல்லது 1985இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தால் இலங்கை நிறையப் பலன் அடைந்திருக்கும்.

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் திரு. பிரான் சோப்ரா முன் கண்டவாறு தெரிவித்தார்.

'ஸ்டேட்ஸ்மான்' பத்திரிகையின் பிரதம ஆசிரியராக திரு பிரான் சோப்ரா பணியாற்றியிருந்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விரிவான பயணம் ஒன்றை மேற்கொண்டுவிட்டு திரு பிரான் சோப்ரா கொழும்பு திரும்பினார்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் சமாதான ஒப்பந்தத்துக்குக் காட்டும் எதிர்ப்புக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவில்லை - இப்படி திரு சோப்ரா தெரிவித்தார். (இ-எ)

## ரயில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
காரணமாகவே ரயில் தடுத்து நிறுத்தப்பட்டது.

ரயில் புறப்படமுடியாமல் இராசாவின் தோட்ட வீதி ரயில்வே கடவையில் வாகனம் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக ரயிலில் பயணம் செய்ய டிக்கட் வாங்கியிருந்த சுமார் 800க்கும் மேற்பட்ட பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இதனிடையே கொழும்பில் இருந்து யாழ் வந்த யாழ்தேவி ரயிலை புகையிரதப் பகுதியினர் கிளிநொச்சியுடன் நிறுத்தி திருப்பி அனுப்பினர்.

நேற்றைய இரவு மெயில் வழமைபோல் கொழும்பு புறப்பட்டுச் சென்றது. (இ-7)

## இவர்களுக்கும் பென்ஷன்

கொழும்பு, செப். 8
கைப்பணியாளர்களுக்கும் பென்ஷன் வழங்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் அமுல் நடத்தவிருக்கின்றது

இத்தகவலை தேசிய கைப்பணிச்சபை இயக்குநர் திரு. தயாலியனகே வெளியிட்டார். (இ-எ)

## சட்ட விரோத---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
சில குழுக்களுக்கு பாதுகாப்புக் கொடுத்து அவர்களை வளர்ப்பதிலும் உங்களுடைய அமைதிப் படை ஈடுபட்டிருப்பது குறித்து தமிழீழ மக்கள் பதற்றமும் ஆத்திரமும் அடைந்துள்ளனர்,

தென் இந்தியாவில் இருந்து திரும்பி வந்துள்ள இந்தக் குழுக்கள் சாதாரண மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பயமுறுத்தலாக அமைந்துள்ளனர்.

எமது மக்களையும் எமது உறுப்பினர்களையும் கொல்வதிலும் கடத்துவதிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய அமைதிப் படையின் பாதுகாப்புக் குடையின்கீழ் இக்குழுக்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளன, இதனால் சட்டம் ஒழுங்கு பராமரிப்புக்கு பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து ஒழுங்காக்குவதற்குப் பதில் அவர்களின் நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுத்து சட்ட பூர்வமாக்கும் முயற்சியில் இந்தியப் படைகள் ஈடுபட்டிருப்பது மக்களிடையே அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். ஈ. என். டி எல். எப்., இயக்கங்களிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியும், சமூக விரோதச் செயலில் ஈடுபடாமல் அவர்களைத் தடுக்கும்படியும் நாம் உங்களைக் கோருகின்றோம்.

2 தமிழ்ப் பகுதிகளில் இலங்கைப் பொலீஸார் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படுவது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்திய சமாதானப் படையின் ஒத்துழைப்புடன் தான் இது செயற்படுத்தப்படுகின்றது.

இந்திய -இலங்கை ஒப்பந்தத்துக்கு இது முரணானது.

இடைக்கால நிர்வாகத்தின் கீழ் தமிழ் பொலீஸ் திட்டம் ஒன்றை எமது மக்கள் எதிர்பார்த்து இருக்கும் போது, இலங்கைப் பொலீஸார் இங்கு வருவது குறிப்பிடத்தக்க அளவு கவலையை ஏற்படுத்தி உள்ளது

3. பாரம்பரிய தமிழர் தாயகமான கிழக்கு மாகாணத்தில் – குறிப்பாக திருகோணமலையில்– பெரிய அளவில் சிங்களக் குடியேற்றம் முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றது.

இந்திய அமைதிப் படை கிழக்கில் நிலைகொண்டிருந்தும் தீவிரக் குடியேற்றம் நடத்தப்படுகின்றது. மீளக்குடியமரச் செல்லும் தமிழர்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றனர்.

இலங்கை இராணுவம், ஊர்காவல் படையுடன் சேர்ந்து திருகோணமலையில் அப்பாவித் தமிழ் மக்களைத் துன்புறுத்தி வருகின்றது.

தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தி, ஊர்காவல் படையிடம் இருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெற்று, தமிழர் மீளக் குடியமர உதவுங்கள்.

4. குறிப்பாகத் தமிழர் பகுதிகளில் இலங்கை இராணுவ முகாம்கள் பெரும் எண்ணிக்கையில் இன்னும் இருப்பது தமிழர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது இலங்கைப் படை அகற்றப்படும் வரை தமிழர் தாயகத்தில் வழமையான நிலை திரும்பாது என்று எம்மக்கள் உணருகின்றனர்.

5 ஒப்பந்தத்தில் உறுதி கூறப்பட்டபடி எல்லாத் தமிழ் அரசியல் கைதிகளும் உடனே விடுவிக்கப்பட வேண்டும்.

— இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது

## அமைதிப்படை---

(1ம்பக்கத் தொடர்ச்சி)
கேசன்துறை, நாவற்குழி, கொடிகாமம், இயக்கச்சி, ஆனையிறவு, வடமராட்சி, பொன்னாலை, மண்டைதீவு, அச்சுவேலி ஆகிய இடங்களில் உள்ள இந்திய அமைதிப் படையின் முகாம்களின் முன்னால் இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள முகாமிலிருந்து வெளியேற முயன்ற அமைதிப் படையினரை மறியல் நடத்திய மக்கள் தடுத்தனர். வடமராட்சியில் உள்ள ஆறு முகாம்களினதும் பொறுப்பதிகாரி லெப் கேர்ணல் அட்வாணியிடம் இந்தியப் பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றையும் மறியல் போராட்டம் செய்த மக்கள் கையளித்தனர்.

பலாலி முகாமின் முன் நடந்த மறியல் முடிவடையும் நேரத்தில் அங்கு சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள், மேஜர் [illegible] ஜர் ஒன்றை சமர்ப்பித்தனர்.

ஏனைய சில முகாம்களின் பொறுப்பதிகாரிகளிடமும் மக்கள் மகஜர்களைக் கையளித்தனர்.

மறியல் போராட்டம் நடத்தியவர்களை அமைதிப்படையினர் ஆயுதபாணிகளாக கண்காணித்த வண்ணம் இருந்தனர் (அ-7-160-68

## வடக்கு-கிழக்கில் பொலீஸாரின் பணி எப்படி இருக்கும்?

கொழும்பு, செப். 8
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலீஸாரைக் கடமையில் ஈடுபடுத்தும் போது நிறைய ராஜதந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கின்றது.

பொலீஸ் மா அதிபர் சிறில் ஹேரத் இப்படிச் சொன்னார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றப் போகும் பொலீஸார் ரோந்து, திடீர்த் தேடுதல் பணிகளில் ஈடுபடும் போது ஆயுதங்கொண்டு செல்வார்களா என்று கொழும்புச் செய்தியாளர் கேட்டதற்கே பொலீஸ் மா அதிபர் முன்கண்டவாறு சொன்னார்.

விசாரணைக்கு வெளியே செல்லும் போது பொலீஸார் ஆயுதங்களைக் கொண்டு செல்லமாட்டார்கள்.

ரோந்து தேடுதலின் போது பொலீஸார் ஆயுதங்களைக் கொண்டு செல்ல அனுமதிப்பது பற்றித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை.

நாட்டின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் எப்படியான கடமைகளில் பொலீஸார் ஈடுபடுகின்றார்களோ அதுபோன்றே வடக்கு, கிழக்கிலும் ஈடுபடுவார்கள்

இப்படி பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார் (இ-எ)

## வர்த்தகர் - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தெரியவருவதாவது:-

நேற்று முன்தினம் இரவு கடைக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கு நித்திரையில் இருந்த பிரஸ்தாப நபரை கட்டி வைத்து ''பெட்சீற்''றினால் கழுத்தை இறுக்கி அவரைக் கொலை செய்தனர்.

பின்னர் அங்கிருந்த வீடியோ டெக், அம்பிளிபயர், கசற்றேடியோ ஆகியவற்றையும், கொலையுண்டவர் அணிந்திருந்த மோதிரம், சங்கிலி, கைக்கடிகாரம் என்பனவற்றையும் எடுத்துச் சென்றனர்.

கொலையுண்டவர் காரைநகரைச் சேர்ந்தவர்.

## நேற்றைய ----

(1ம்பக்கத் தொடர்ச்சி)

★ தமிழ் மக்களின் ஒரே சக்தி விடுதலைப் புலிகள் என்பதை அங்கீகரி

★ எமது தலைவன் பிரபாகரனே.

★ சமூக விரோத கும்பலிற்கு துணை போகாதே

★ சமூக விரோத சக்திகளாகிய டெலோ, புளொட், ஈ. பி ஆர். எல். எவ் இன் ஆயுதங்களைப் பறி.

★ விடுதலைப் புலிகளின் பொறுமையை சோதிக்காதே.

★ அடிமையாக வாழ்வதை விட போராடிச் சாவதே மேல்.

★ தமிழினத் துரோகி கூட்டணிக்கு துணை போகாதே.

★ உயிரைக் கொடுப்போம், உரிமையை விட்டுக்கொடோம்.

★ தமிழீழமே எமது இறுதி இலட்சியம்.

★ எமது தாயகத்தை பிரிக்காதே.

★ முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களை உடனே தடுத்து நிறுத்து

★ மலையக மக்களை புறக்கணிக்காதே

★ பாடசாலைகளில் இராணுவ முகாம், புத்த விகாரைகள் புனரமைப்பா?

★ சிறிலங்கா பொலீஸ் நிர்வாகத்தை அனுமதிக்க வேண்டாம்.

★ துரோகக் கும்பல்களுக்கு ஆயுதத்தைக் கொடுத்து விடுதலைப் புலிகளைக் கொல்லாதே.

★ எமது தியாகத்தை அவமதிக்காதே. (ஒ)

## ஆயுள் வேத வைத்தியர் பட்டியல்

கொழும்பு, செப். 8
ஆயுள்வேத வைத்தியர்களின் பெயர்கள் கொண்ட புதிய பட்டியல் ஒன்றை ஆயுர்வேத வைத்திய சபை தயாரித்துள்ளது.

மாவட்ட ரீதியாக புதியபட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது

எல்லா உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் இப்பட்டியல்கள் விநியோகிக்கப் பட்டு உள்ளன. [இ எ]

## இன்று வழக்காடு மன்றம்

யாழ்ப்பாணம், செப். 8
ஊரெழு மீனாட்சியம்பாள் தேவஸ்தான மகோற்சவ இலக்கிய விழாவில் இன்று வழக்காடு மன்றம் நடைபெறும்.

குற்றக் கூண்டில் இதிகாசங்கள் நிறுத்தப்பட்டு ''சமய உணர்வை இதிகாசங்கள் திசை திருப்புகின்றன'' என்னும் வழக்குத் தொடரப்படும்.

வாதிகளாக காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு திருநந்தகுமார், திரு. ரி. திவகுமாரன் ஆகியோரும், பிரதிவாதிகளாக பண்டிதர் க ஈஸ்வரநாத பிள்ளை, திரு க குமாரதாசன், திரு க. கணேசமூர்த்தி ஆகியோரும் வாதிடுவர்.

திரு இ. முருகையன், கலாநிதி இ பாலசுந்தரம், திரு இ ஜெயராஜ் ஆகியோர் நீதிபதிகளாகக் கடமை ஆற்றுவர். (இ)

## வடக்கு. -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
டம் இலங்கை - இந்திய உறவில் புதிய கட்டம் ஒன்றை ஏற்படுத்தவுள்ளது

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவைப் பாதிக்கும் இனப்பிரச்சினைக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் தீர்வு கண்டு உள்ளது

அதனால் இது தனித்துவமிக்க ஒப்பந்தமாகி விட்டது.

இரு நாடுகளின் உறவும் வளரப்பாடுபடுவதே நமது நோக்கமாக இனி அமைய வேண்டும்.

இலங்கையில் அமைதியும் இயல்பு நிலையும் விரைவாகத் திரும்பிக் கொண்டிருக்கின்றன,

விரைவில் இலங்கை இந்தியாவுக்கு இடையே படகுச் சேவை ஆரம்பமாகும்.

இப்படி அமைச்சர் திவாரி சொன்னார்.

இலங்கை நிதி அமைச்சர் ரொனி டி மெல் பேசுகையில்—

''இரு நாடுகளுக்கும் இடையேயான அரசியல் உறவு பலப்படுத்தப்பட வேண்டும். இதற்குப் பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்பு அவசியம்'' —என்று சொன்னார் (இ-எ)

## இந்திய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தலில் கொண்டு செல்லும் தலைமைத்துவத்தை தகர்த்தெறிய முன்வாருங்கள். இனி மேலும் சரியான தலைமைத்துவத்தைத் தெரிந்தெடுக்க முனையுங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

கவிஞர் காசி ஆனந்தன் பேசுகையில்; ''40 லட்சம் தமிழ் மக்கள் மடிந்து தமிழ்ப் பிரதேசங்கள் சுடுகாடாக மாறினாலும் தமிழீழப் போராட்டம் தொடரும்.

தமிழீழமே முடிந்த முடிவு. இதனைப் பெற்றுக்கொள்ளும்வரை இம் மண்ணில் இப்போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்'' என்றார்.

திலகர், கவிஞர் மு வே போ வாஞ்சிநாதன், ஆகியோரும் உரையாற்றினர். (இ-51)

## சிங்களக்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
அதிகாரி வெளியிட்ட தகவல் தொடர்பாக திரு. புலேந்திரன் இவ்வாரம் அளவில் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் கலந்தாலோசனை செய்வார். (அ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 08-09-1987ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on 08 - 09 - 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org